


# பச்சிலை

அரையாண்டு சஞ்சிகை



**பச்சிலை மலர்க்குழு**

புலோப்பளை பொதுநூலகம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பளை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# பச்சிலை

அரும்பு -1 இதழ் -1

## அரையாண்டு சஞ்சிகை

வெளியீடு:
"பச்சிலை மலர்க்குழு"
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
புலோப்பளை பொதுநூலகம்
பளை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | பச்சிலை |
| அரும்பு | - | *1* |
| இதழ் | - | *1* |
| பக்கங்கள் | - | *56* |
| அச்சுப்பதிப்பு | - | மட்டுவில் ரம்யன் அச்சகம் |
| மலர் ஆசிரியர் | - | திரு. ச. முரளீதரன் |
| வெளியீடு | - | "பச்சிலை மலர்க்குழு"<br>பச்சிலைப்பள்ளி பிரதேச சபை<br>புலோப்பளை பொதுநூலகம்<br>பளை |
| தொலைபேசி இல | - | *0243243544* |
| மின்னஞ்சல் | - | pallaips@gmail.com |
| விலை | - | *150.00* |

## பச்சிலை மலர்க்குழு

தலைவர் – **திரு. அ. கேதீஸ்வரன்** *(உதவி திட்டமிடல் பணிப்பாளர்)*

செயலாளர் – **செல்வி. செ. உமாதேவி** *(நூலகர்)*

பொருளாளர் – **திருமதி. அ. தர்மகுலசிங்கம்** *(இளைப்பாறிய நூலகர்)*

மலராசிரியர் – **திரு. ச. முரளீதரன்** *(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்)*

**செயற்குழு உறுப்பினர்கள்**

**கௌரவ பர்ணாந்து டொமினிக் அன்ரன்**
*(தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)*

**கௌரவ அன்ரன் அன்பழகன்**
*(உறுப்பினர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)*

**கௌரவ வ. தியாகராசா**
*(உறுப்பினர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை)*

**திரு. சி. சிவப்பிரகாசம்**
*(செயலாளர், பிரதேச சபை பச்சிலைப்பள்ளி)*

**திரு.வெ. சுப்பிரமணியம்**
*(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

**திரு. சி. புவனராசா**
*(கிராம அலுவலர் பளை நகரம்)*

**திரு. சி. கருணாகரன்**
*(ஆக்க இலக்கிய படைப்பாளி)*

**திரு. சு. சுரேன்**
*(பல்கலைக்கழக மாணவன்)*

**திரு. மி . அலேஸ்**
*(சென்பீற்றர் விளையாட்டுக்கழகம்)*

**திருமதி இ. சிறீஸ்கந்தராஜா**
*(ஆசிரியர்)*

**திரு. சி.கனகசிங்கம்**
*(தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கம் முருகந்த நகர்)*

# நூலக ஆலோசனைக் குழு
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

*தலைவர் :-* **கௌரவ பர்ணாந்து டொமினிக் அன்ரன்**
*(தவிசாளர் பிரதேசசபை, பச்சிலைப்பள்ளி)*

*உபதலைவர் :-* **திரு சி. சிவப்பிரகாசம்**
*(செயலாளர், பிரதேச சபை பச்சிலைப்பள்ளி)*

*செயலாளர் :-* **செல்வி செ. உமாதேவி** *(நூலகர்)*

**உறுப்பினர்கள்**

1) **திரு. ப. அரியரத்தினம்** *(ஓய்வுபெற்ற மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்)*

2) **திரு.சி.வதனராசா** *(ஆசிரியர்)*

3) **திருமதி இந்துமதி ஸ்ரீஸ்கந்தராசா** *(ஆசிரியர்)*

4) **திருமதி ரேவதி முரளீதரன்** *(ஆசிரியர்)*

5) **திரு. வெ. சுப்பிரமணியம்** *( சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

6) **திரு. து. விநாயகமூர்த்தி** *(வருமான பரிசோதகர்)*

7) **திரு. து. இளங்குமரன்** *(முகாமைத்துவ உதவியாளர்)*

8) **செல்வி க. வதனா** *(பொறுப்பதிகாரி)*

9) **திரு.க. காசிப்பிள்ளை** *(ஓய்வூதியர்)*

10) **செல்வி மு. பகீரதி** *(நூலக அங்கத்தவர்)*

11) **திருமதி சு. ஜெயரஞ்சினி** *(தம்பகாமம் சரஸ்வதி முன்பள்ளி)*

12) **செல்வி ந. பத்மராஜினி** *(நூலக அங்கத்தவர்)*

13) **திருமதி அ. தர்மகுலசிங்கம்** *(ஓய்வுநிலை நூலகர்)*

14) **திரு.த. சுரேன்** *(வாசகர் வட்ட பிரதிநிதி)*




## பச்சிலை மலர்க் குழு

இருப்பவர்கள் இடமிருந்து வலம்:
திரு. அ. கேதீஸ்வரன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர்) கௌரவ வ. தியாகராசா (உறுப்பினர் ப.பி.ச.) கௌரவ பர்ணாந்து டொமினிக் அன்ரன் (தவிசாளர், ப. பி.ச.) கௌரவ அன்ரன் அன்புழகன் (உறுப்பினர் ப.பி.ச.) திரு. சி. சிவப்பிரகாசம் (செயலாளர், ப.பி.ச.)

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:
திரு.வெ. சுப்பிரமணியம் (ச. அ. உ) திரு. ச. முரளீதரன் (நி. உ.) திருமதி. அ. தர்மகுலசிங்கம் (இளைப்பாறிய நூலகர்) திருமதி இ. சிறீஸ்கந்தராஜா (ஆசிரியர்) செல்வி. செ. உமாதேவி (நூலகர்) திரு. சி.கனகசிங்கம் (தலைவர் கி.அபி.ச.) திரு. சி. புவனராசா (கி. அலு.)

# உள்ளே....


| | | பக்கம் |
|---|---|---|
| *1)* | ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் | i -v |
| *2)* | மலராசிரியரின் உள்ளத்திலிருந்து | vi |
| *3)* | கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலை | *1* |
| *4)* | பச்சிலைப்பள்ளியின் பொருளாதார வாழ்வு | *7* |
| *5)* | உண்மைக் காதலைக் காணமுடியும் | *11* |
| *6)* | அழியாத நினைவுகள் | *12* |
| *7)* | சித்த வைத்தியத்தின் தொன்மையும் வன்மையும் | *17* |
| *8)* | பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள ஆலயங்களும் அவற்றின் வரலாற்றுக் குறிப்புக்களும் | *22* |
| *9)* | பச்சிலைப்பள்ளி பொதுநூலக வரலாறும் அதன் பயன்பாடுகளும் | *27* |
| *10)* | போர் கொடியது | *30* |
| *11)* | உடலைக் கோணிப் பைக்குள் | *31* |
| *12)* | வரலாறு – புனைவுகளுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் பச்சிலைப்பள்ளியின் அமைவு | *32* |
| *13)* | நாட்டுக்கூத்தும் பச்சிலைப்பள்ளியின் மதவழிபாடும் | *38* |
| *14)* | பிரபல நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் | *44* |
| *15)* | பேராசை பெருநட்டம் | *46* |



### அருள்மிகு புலோப்பளை அறத்தி அம்மன் ஆலய பிரதம குரு அவர்களின்

# ஆசிச் செய்தி

பச்சிலைப்பள்ளிப் பதியிலே பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் நூலகத்தின் வெளியீடாக "பச்சிலை" என்னும் பெயரில் அரையாண்டுச் சஞ்சிகையாக பல்வேறு விதமான கல்வி, கலை, சமய, சமூக விழுமியங்களைத் தாங்கி நிறைந்த அழகிய மலராக பிரதேசத்தின் அடையாளத்தை சிறப்பிக்கும் வண்ணம் வெளியிடுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம். இச்சிறப்புமிக்க மலர் வெளிவருவது காலத்தின் கடமையாகும். இந்தச்சிறப்புமிக்க மலரை ஆக்கிய பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நூலகத்தினர் மற்றும் ஆக்கங்கள், கட்டுரைகள், கவிதைகள், போன்றவற்றைப் படைத்தவர்களுக்கும் இந்தத் தருணத்திலே எனது உள்ளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்படி நூல் வெளியீடு சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல அம்பிகையின் தாள் பணிந்து இறையருளை வேண்டி நல்லாசிகள் கூறியமைகின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இங்ஙனம்
*"ஈசானச் சிவாச்சாரியார்"*
*"சிவாகம சாதக ஞானபானு"*
*"சிவாகம கிரியா சாகரம்"*
**சிவஸ்ரீ ந. பிரபாகரக்குருக்கள்**



புலோப்பளை பங்குத் தந்தை அவர்களின்

# ஆசியுரை

மனிதனுடைய நாகரீகம் தொடங்கிய காலம் முதல் இன்று வரைக்கும் கலையும் கலாசாரமும் அதனுடன் சேர்ந்தே இருக்கின்றது. இந்த வகையில் ஒரு சமூகத்தின் கலையும் கலாசாரமும் அவனுடைய அடையாளங்களாகக் கணிக்கப்படுகின்றது. கலை இல்லா ஊர் களை இல்லா ஊர் என்பார்கள். இவ்வாறு கலையையும் சிறந்த கலாசாரத்தையும் கொண்டவர்கள் தமிழர்கள். அந்த வகையில் எழில் பூத்த பசுமையும், இளமையும், கனிகளின் சுவையும் கொண்ட ஊராம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் வளத்தையும் கலையுணர்வையும் கொண்ட மனிதர்களின் அடையாளத்தை வெளிக்கொணரும் இப் "பச்சிலை" எனும் நூல் வெளியிடுவதையிட்டு நான் பெருமையடைகிறேன். பச்சிலைப்பள்ளி பிரதேச சபை முன்னெடுக்கும் இச் செயற்பாட்டை பாராட்டுவதோடு இப் பிரதேசத்தின் கலை ஆர்வலர்களையும் நெறிப்படுத்தி ஊக்கப்படுத்த ஆசித்து நிற்கிறேன். நீண்ட வரலாற்றைக்கொண்ட தமிழர் பிரதேசத்தில் இருந்து உணர்வுகளைத் தாங்கி வெளிவரும் படைப்பாற்றல்களை மனமார வாழ்த்துகின்றேன். கலையோடு கலாசாரமும், வீரத்தமிழோடு உணர்வுகளும், படிப்போடு பண்பும் பின்னிப் பிணைந்து ஒரு ஆளுமைமிக்க ஆன்மீகம் கலந்த சமுதாயம் படைக்கும் இவ் நூலினை வாழ்த்தி இறை ஆசீர் வேண்டி நிற்கிறேன்.

**அருட்பணி அ. ஜேம்ஸ்நாதன்**
பங்குத் தந்தை
புலோப்பளை. பளை.

# முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் வாழ்த்துரை



கிளிநொச்சி மாவட்டத்தின் நிர்வாக எல்லைப் பரப்பினுள் அமைந்துள்ளதும், யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லையிலே நிலத் தொடர்புடன் அமைந்துள்ளதுமான - பச்சிலைப்பள்ளி பிரதேச சபையானது மக்களுக்கு வழங்கிவரும் தனது சேவை வரலாற்றில் - கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கும் பயன் அளிக்கும் ஒரு புதிய மைல் கல்லை பதிக்கும் நிகழ்வாக "பச்சிலை" என்னும் அரையாண்டு சஞ்சிகையின் வெளியீடு அமைகின்றது.

இச் சஞ்சிகையானது - இம்மாவட்டம் மற்றும் பிரதேசத்தின் வரலாறு, தகவல்கள், செய்திகள், நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள், பிரதேசத்தின் தனித் தன்மைகள், சிறப்புகள், முக்கிய அம்சங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய ஆக்கங்களைக் கொண்டிருப்பதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அபிவிருத்தி, ஆலோசனை சார்ந்த செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் விளக்கங்களையும் தன்னகத்தே தாங்கி வெளிவருகின்றமையினை மிகவும் மனமுவந்து வரவேற்பதில் பெருமகிழ்வடைவதுடன் பெருமையும் அடைகின்றேன்.

இச் சஞ்சிகையின் பலாபலன்களை இப்பிரதேச மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேச மாணவர்கள் மற்றும் ஏனையோரும் பெறவேண்டும் என்பதே எனது பேரவா. இத்தகையதொரு சஞ்சிகையினை வெளியிடவேண்டுமென்ற உந்துதல் மற்றும் நோக்கத்தினை செயல் வடிவில் கொண்டுவருவதற்காக முன்னின்று உழைத்த - பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் திருவாளர். சி.சிவப்பிரகாசம் மற்றும் நூலகர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருடன், இந்த சமூக அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த ஏனைய உத்தியோகத்தர்கள், மற்றும் அனைவரையும் பாராட்டுவதுடன் சஞ்சிகையினை வெளியிட அயராது பாடுபட்ட மலர்க் குழுவினரையும் வாழ்த்துகின்றேன்.

*மேலும் "பச்சிலை" சஞ்சிகையானது மென்மேலும் மெருகேறி அதன் ஒவ்வொரு பதிப்பிலும் புதுமைகளை வெளிக்கொணர்ந்து - தனது நோக்கத்தினை அடைவதற்காக வலுவுடன் பயணிக்க எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனநிறைவடைவதுடன் - இச்சந்தர்ப்பத்தினை எனக்கு அளித்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினருக்கு எனது நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**திரு கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் SLAS**
*முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்*
*கிளிநொச்சி*



# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

## தவிசாளரின்

# வாழ்த்துச் செய்தி

எமது பிரதேச சபையின் மலர்க் குழுவினால் "பச்சிலை" எனும் அரையாண்டு சஞ்சிகை வெளியிடப் படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் எமது பிரதேசத்தில் எமது சபை எமது மக்களுக்கான பல்வேறு சேவைகளை வளப் பற்றாக்குறைக்கும், பாரிய சவால்களுக்கும் மத்தியில் ஓரளவிற்கு நிறைவாக ஆற்றிவருகின்றது. ஆளுமைமிக்க, பலம்பொருந்திய, சட்டத்தை மதிக்கின்ற, மனிதநேயமிக்க ஓர் சமூகத்தை உருவாக்குவதே எம் எல்லோரினதும் கடமையாகும். இவ் இலக்கினை எய்துவதற்கு இச்சபையின் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆற்றுகின்ற அர்ப்பணிப்பான சேவை அளப்பரியது.

நண்பர்கள்கூட சந்தரப்ப சூழ்நிலையில் ஏமாற்றி விடுகிறார்கள் ஆனால் நம் வாழ்வின் ஏணிப்படியாகவும் நம்பிக்கைக்குரியதுமானவை தரமான நூல்களே. தரமான நூல்களே எம்மைக் கைவிடாத உற்ற நண்பர்கள். அந்த வகையில் தரமான நூல்கள் வெளிவருவதனை நாம் அனைவரும் மகிழ்வுடன் வரவேற்க வேண்டும்.

நூல்களைச் சேகரித்தல் விநியோகித்தலுடன் நின்றுவிடாது பல்வேறு சேவைகளை எமது நூலகம் ஆற்றிவருவது வரவேற்கத்தக்கது. அந்த வகையில் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின், மாணவச் செல்வங்களின் ஆக்க இலக்கிய செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் ஆக்கங்களை தாங்கி வருகின்ற "பச்சிலை" என்னும் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவர எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, இம்மலர் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி விடாமுயற்சியுடன் உழைத்த அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பர்ணாந்து டொமினிக் அன்ரன்**
*கௌரவ தவிசாளர்.*
*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.*



# பச்சிலை பசுமைதர வாழ்த்துக்கள்

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் நூலக அபிவிருத்திப் பிரிவினரால் வெளியீடு செய்யப்படும் "பச்சிலை" மலரின் முதலாவது இதழுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசார பேரவையினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற "பசுந்துளிர்" மலரைப்போல் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் புதிய படைப்பாளிகளை உருவாக்குவதற்கும், அவர்களின் படைப்புகளிற்கு ஒரு தளமாக செயற்படுவதற்கும் வாய்ப்பை வழங்கியுள்ள இவ் அரையாண்டு மலரானது புதிய இளம் ஆக்க கர்த்தாக்களிற்கும் வாய்ப்பளித்துக்கொள்ள வேண்டும். இக் கன்னி முயற்சிக்கு உழைத்து நிற்கும் பச்சிலை மலர்க் குழுவிற்கும் பிரதேச சபைக்கும் எனது உளமார்ந்த பாராட்டுக்கள்

**சி. சத்தியசீலன்**
*பிரதேச செயலர்*
*பச்சிலைப்பள்ளி*

## மலராசிரியரின் உள்ளத்திலிருந்து.......



புத்தகங்களை சேகரித்து வைக்குமிடம் பொது நூலகம் என்ற கருத்தியல்மாறி ஒரு சமூகத்தை வழிப்படுத்துகின்ற நெறிப்படுத்துகின்ற அளவீடு செய்கின்ற ஒரு சமூகக் கருவியாக பொது நூலகங்கள் செயற்படுகின்றன, பார்க்கப்படுகின்றன. எமது புலோப்பளை பொது நூலகமும் பல்வேறு சேவைகளை எமது சமூக வளர்ச்சிக்காக ஆற்றிவருகின்றது. அந்தவகையில் இன்னுமொரு படி நிலை மேலே சென்று எமது மக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதற்காக "பச்சிலை" என்ற அரையாண்டு சஞ்சிகையினை வெளியீடு செய்கின்றது.

ஒரு தனி மனிதனோ அன்றி சமூகமோ தங்கள் இருப்பினை குறியிடுவதற்கு தங்கள் வாழ்தடங்களை பதிவாக்கம் செய்வது இன்றியமையாததாகும். அப்பொழுதுதான் அடுத்துவரும் சந்ததிகள், பரம்பரைகள் தங்களை அதற்கேற்றவாறு புடம் போட்டுக்கொள்ள முடியும். தற்போதைய பதிவுகள்தான் எதிர்காலத்தில் மனித இருப்பினைப் பற்றியும், வாழ்முறைகளைப் பற்றியும், கலைகலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் பற்றியும் சொல்லப்படுகின்றன. எனவே அவற்றை வெளிக்கொணர்வதும், பாதுகாப்பதும் எமது எல்லோரினதும் தலையாய கடமையாகும். எமது பிரதேசத்திலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக பல படைப்பாளிகள் இலைமறை காயாக எந்தவித வாய்ப்புக்களுமின்றி இருக்கின்றார்கள். இத்துறையிலே ஆர்வமுள்ள பலமாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து ஊக்குவிப்பதே எமது நோக்கங்களில் ஒன்றாகும். எதிர்காலத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் சங்கமம் உருவாவதற்கு இது அடிப்படையாக அமையும் என்பது வெள்ளிடைமலையாகும்.

"பச்சிலை" யின் முதலாவது இதழானது மலர்க்குழுவின் அயராத உழைப்பினால் பல்வேறு தடங்கல்களுக்கு மத்தியில் வெளிவருவதனையிட்டு அகமகிழ்வதனை உவகையுடன் தெரியப்படுத்துகின்றேன். எனக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே இது மகிழ்ச்சியானதாகும். இந்நேரத்தில் இவ்விதழுக்கு ஆக்கங்களை வழங்கிய, ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி வழங்கிய அனைவருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை சார்பாகவும், பச்சிலை மலர்க் குழு சார்பாகவும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தவமிருந்து முதல் குழந்தை இந்த மண்ணிலே பிரசவித்துள்ளது. இது தவழ்வதும், நடப்பதும், தொடர்வதும் எமது அனைவரினதும் கைகளிலே தங்கியுள்ளது. எனவே இக்கைங்கரியத்துக்காக நாம் அனைவரும் உழைப்போம் என உறுதி பூணுவோம்.

**ச.முரளீதரன்**

# கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விநிலை

## சமகால நோக்கு

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விநிலை பற்றி இன்று அதிகமாகப் பேசப்படுகின்றது. நாளாந்தம் பத்திரிகையில் விமர்சனங்கள் வெளியிடப் படுகின்றன. இந் நிலையில் இம்மாவட்டத்தின் இன்றைய கல்வி நிலைபற்றி சற்று ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கிளிநொச்சி மாவட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்து 1.5.1984ம் ஆண்டு தனியான ஒரு நிர்வாக மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை கிளிநொச்சி மாவட்டம் ஏனைய மாவட்டங்கள்போல் தனியான மாவட்டமாக நிருவகிக்கப் படுகின்றது. இம்மாவட்டத்தின் அடிப்படை வருமானமாக விவசாயம் விளங்குகின்றது. இந்நிலையில் தனிமாவட்டமாகப் பிரிக்கப் பட்டதன் பின் கல்வி நிலைகளில் பல்வேறு சவால்களை இம்மாவட்டம் எதிர் நோக்கியது.

*01.05.1984*ல் கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்பட்டபோது முதலாவது கல்விப் பணிப்பாளராக திரு.எம்.எம்.மன்சூர் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவர் பின்னர் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராகவும், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாள ராகவும் பணிபுரிந்தவர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரே ஒரு கல்வி வலயம் மட்டும் உண்டு. தற்போது *106* பாட சாலைகள் இம்மாவட்டத்தில் உள்ளபோதும் இரு கல்வி வலயங்களாகப் பிரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அம்முயற்சி வெற்றியளிக்க வில்லை. ஒரு வலயம் எனும்போது பாடசாலைகளின் தொகை அதிகமாகவும், பெரிய நிலப் பரப்பை உடையதாகவும், சீரற்ற போக்குவரத்துப் பாதைகளைக் கொண்டதர்கவும் உள்ளது. தனிக்கல்வி வலயமாக உருவாகியபோது பின்வரும் பிரச்சினைகளை இவ் வலயம் எதிர்நோக்கியது.

- ஆசிரியர் பற்றாக்குறை அதிகம்
- பௌதிக வளப் பற்றாக்குறை
- ஆசிரியர் தங்குமிட வசதியின்மை
- உள்ளூர் போக்குவரத்து வசதியின்மை

மேற்குறித்த பிரச்சினைகள் காலக்கிரமத்தில் ஓரளவு சீர் செய்யப்பட்டு ஏனைய மாவட்டங்

**ப. அரியரத்தினம்,**
ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.

களோடு ஓரளவு ஒப்பிடக்கூடிய நிலையில் 1995ம் ஆண்டு வரை இருந்தது.

1996ம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வு ஏற்பட்டு கிளிநொச்சி மாவட்டம் உள்ளடக்க முடியாத சனத்தொகையை உள்ளடக்கிய போது கல்வியில் பல பிரச்சினைகள் திடீரென ஏற்பட்டன.

- புதிதாகப் பாடசாலைகளை உருவாக்க வேண்டியமை
- பௌதீக வளங்களில் விசேட மாக தளபாட வசதிகள் அதிகம் தேவைப்பட்டமை
- பல பாடசாலைகள் மக்களின் தங்குமிடமாக மாறியமை

இந்நிலைமைகள் காலக்கிரமத்தில் ஓரளவு சீர்திருத் தப்பட்டதுடன் யாழ்ப்பாண மக்களும் படிப்படியாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றபோது 2000ம் ஆண்டளவில் கிளிநொச்சி கல்விவலயமும், பாடசாலைகளும் தமது முன்னைய சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கின.

தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் 2007ம், 2008ம் ஆண்டுகளில் ஏற்பட்ட உக்கிரமான போர்ச் சூழ்நிலையில் மடு கல்விவலயம் , வவுனியா வடக்கு வலயத்தின் 75% பாடசாலைகளும், துணுக்காய் வலயத்தின் 50 % பாடசாலைகளும் கிளிநொச்சி வலயப் பரப்பில் இயங்கத் தொடங்கின. இதனால் கிளிநொச்சி கல்வி வலயம் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த ஒரு வலயமாக வடமாகாணத்தில் விளங்கியது. மீண்டும் 2008ம், 2009ம் ஆண்டில் ஏற்பட்ட வன்னியுத்தம் காரணமாக 2009ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் கிளிநொச்சி வலயத்தின் அனைத்துப் பாடசாலைகளும் செயலிழந்தன. பாடசாலைக் கட்டடங்கள் பாரிய சேத மடைந்தன. பௌதீக வளங்கள் அனைத்தும் அழிந்தன. பல மாணவர்களதும், ஆசிரியர்களதும் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

2010ம் ஆண்டில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகி இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பிரதேசத்தின் ஒரு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்கள் குடியேறி யுள்ளனர். இன்று 96 பாடசாலைகள் கிளிநொச்சி கல்வி வலயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் இன்றைய கல்விநிலை பற்றி சற்று சிந்திப்போம்.

1984 – 2012 வரையான 28 வருட காலமும் ஒரு யுத்த பிரதேசமாகவே கிளிநொச்சியைக் கருதவேண்டும். கடந்த 30 வருடகாலத்தை யுத்த காலமாகவே யாவரும் ஒப்புக் கொள்கின்றனர். இந்தக் காலத்தில் ஏனைய மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய

- இரும்பாலான தளபாடங்கள் உருக்கு அலுமாரிகள்
- இரசாயன ஆய்வுகூட உப கரணங்கள்
- கம்பியூட்டர்கள்

முதலான பொருட்கள் கிளிநொச்சி வலயத்திற்குக் கொண்டு வர பாதுகாப்பு

அமைச்சு அனுமதி அளிக்கவில்லை. ஒரு நவீன கல்வி உலகில் இத்தகைய பொருட்கள் இன்றி கல்வி போதிப்பதும், கல்வியில் முன்னேறுவதும் எவ்வாறு என்பதை யாவரும் உணர்வர். 2010ம் ஆண்டின் பின்பே இத்தகைய பொருட்கள் கிளிநொச்சி பாடசாலை களுக்குக் கிடைக்கப் பெற்றன.

இந்நிலையில் இன்றைய நோக்கில் எமது மாவட்ட கல்வித் தேவைகள் பற்றிச் சிறிது நோக்குவோம். யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் தூரநோக்கு சிந்தனையோடு கல்வி அபிவிருத்தி திட்டமிடப்படாமை பின்னடைவை ஏற்படுத்த காரணமாகும்.

யுத்தம் ஒரு நாள் முடிவடையும். அப்போது பாரிய அழிவுகள் ஏற்படும். பௌதீக வளங்கள் முற்றாக அழிந்தொழியும். மனித சக்திகள் இல்லாது போகும். இந்நிலையில் புதிதாக ஒரு பிரதேசத்தைக் கட்டியெழுப்ப எத்தகைய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென திட்டமிடப்படவில்லை. 2ம் உலக யுத்தம் முடிவுற்று யப்பான் நாடு அடைந்த சேதத்தையும், அந்நாடு எவ்வளவு துரிதமாக முன்னேறியது என்பதையும் நாம் நன்கு அறிவோம். 2006ம் ஆண்டு "சுனாமி" அழிவின் பின் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் துரிதமாக அமைக்கப்பட்டமை போன்று கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி திட்டமிட்டு துரிதமாக்கப்படாமை கல்வியில் ஏற்பட்ட பின்னடைவுக்கு ஒரு காரணமாகும்.

1984 - 2011ம் ஆண்டு வரை கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் பலரும் யாழ்ப்பாண மாவட்ட ஆசிரியர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த ஆசிரியர் பற்றாக்குறையால் அவர்கள் தமது பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறமுடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் இடமாற்றம்பெறத் தகுதி உடையவர்கள். இவர்கள் தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கில பாடங்களில் மிகவும் அனுபவம் பெற்றவர்களாக விளங்கினர். இந்நிலையில் 2012ம் ஆண்டு இவர்களில் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனால் இம்மாவட்டத்தில் திடீரென ஆசிரியப் பற்றாக்குறை உருவாகியது. இதனைச் சீர்செய்ய யாழ். மாவட்ட வலயங்களில் இருந்து 139 ஆசிரியர்கள் கிளிநொச்சி வலயத்துக்கு இடமாற்றப்பட்டனர். இவர்களில் 119பேர் கடமையை ஏற்றுக்கொண்டனர். இந்நிலை பலருக்கு ஒரு செய்தியைக் கூறியது.

கிளிநொச்சி வலயத்திலிருந்து இடமாற்றப்பட்ட ஆசிரியர்களுக்குப் பதிலாக ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என்பதாகும். இதனால் ஏற்பட்ட கல்வி தொடர்பான தாக்கம் எதுவெனில்

1. கிளிநொச்சியிலிருந்து இடமாற்றப் பட்டவர்கள் மிகவும் அனுபவசாலி களான நீண்டகால சேவையை உடைய கணித, விஞ்ஞான, ஆங்கில, தமிழ் ஆசிரியர்கள்.
2. கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகை தந்தவர்கள் யாழ். வலயங்களில் மேலதிக

ஆசிரியர்களாகக் காணப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்

3. வருகைதந்த ஆசிரியர்களில் அநேகமானவர்கள் 2, 3 குழந்தைகளுக்குத் தாயானவர்கள். நாளாந்தம் தமது வீட்டிலிருந்து வருகை தந்து பிற்பகல் திரும்பிச் செல்பவர்கள்.

மேலும் கிளிநொச்சி வலயத்தில் பூநகரி, கண்டாவளைப் பிரதேசங்களில் 30 வரையான பாடசாலைகள் இயங்குகின்றன. இப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் வந்து கற்பிப்பது என்பது " ஒரு தொழில் " எனக் கருதலாமே தவிர " சேவை " எனக் கருத முடியாது.

இந்நிலையில் புதிதாக நியமனம் பெறுபவர்கள் அல்லது ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறுபவர்களை அல்லது கல்வியியற் கல்லூரியில் இருந்து வெளியேறுபவர்களை முழுமையாகக் கிளிநொச்சி வலயத்திற்கு நியமித்தால் இந்நிலையைச் சீர்செய்யக்கூடியதாக இருக்கும். மேலும் ஆசிரியர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப் படாமையும் ஒரு காரணமாகும். யுத்தத்தால் அழிந்த பாடசாலைகளே இன்னமும் திருத்தப்படவில்லை. ஆசிரியர்கள் தங்குவதற்கு பூநகரி, கண்டாவளைப் பிரதேசங்களில் பல குடிமனைகள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப் பட்டால் ஆசிரியர்கள் நாளாந்தம் பிரயாணம் செய்யாமல் தங்கியிருந்து சிறப்பான கல்வியை அவர்கள் அளிப்பார்கள்.

இன்றைய கல்விநிலையில் மாணவர்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். 75% மக்கள் விவசாயிகள். அவர்களது பிள்ளைகளில் அநேகர் வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்கள். விவசாய நிலங்கள் இன்னும் பூரணமாகத் திருத்தப் படவில்லை. மீள்குடியேற்ற வசதிகள் பூரணமாகச் செய்யப்படவில்லை. இது ஒரு புறம். மறுபுறம் யுத்தம் காலாகாலமாக இடம்பெற்ற பல இடப்பெயர்வுகளுக்கு முகங்கொடுத்த மக்கள் தமது பிள்ளைகளைப் படிக்க வைப்பதிலும் பார்க்க வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் கரிசனை காட்டுவதால் பிள்ளை களும் பாடசாலைகளில் கல்விகற்பதில் குறிப்பாக தனது சகோதரர் வெளிநாட்டில் உள்ள குடும்பமாயின் இத்தாக்கம் அதிகமாக உள்ளது.

இவ்வாறே கடந்த 3 தசாப்த காலமாக யுத்த சூழ்நிலையால் சில வசதிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கவில்லை. பல கட்டுப்பாடு களுக்குப் பெற்றோரும் , மாணவரும் உட்பட்டிருந்தனர். இப்பொழுது அக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் பல துஸ்பிரயோகங்களுக்கு மாணவர்கள் உட்படுகின்றார்கள். பெற்றோரும் கண்டும் காணாமலும் உள்ளனர்.

- விரும்பத்தகாத தொலைக்காட்சிகள்
- கைத்தொலைபேசிப் பாவனை
- போதைவஸ்துப் பாவனை
- சுதந்திரமான பொழுதுபோக்கு
- விரும்பத்தகாத சஞ்சிகைகள்

இவ்வாறான நிலைகளும் எமது மாணவரின் கல்விக்கு சவால்களாக விளங்கு கின்றன.

யுத்தத்தால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டம் விளங்கும்போது அதனைச் சகல துறைகளிலும் துரிதமாக முன்னேற்றப் பலரும் சேர்ந்து திட்டமிட்டு செயற்படுவது அவசிய மாகும். இந்நிலையில்

- கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் அனைத்தும் துரிதமாகக் கட்டியெழுப் பப்பட வேண்டும்.
- விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி அறைகள், தொழில்நுட்ப அறைகள் கட்டப்பட வேண்டும்.
- சகல பாடசாலைகளுக்கும் மின் இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.
- ஆசிரிய நியமனத்தில் வடமாகாணத் திற்கான முழு ஒதுக்கீட்டையும் ஒரு வருடம் கிளிநொச்சி வலயத் துக்காக நியமனம் செய்தல்
- சகல பாடசாலைகளையும் உள்ளடக் கத்தக்கதாக கொத்தணி முறையிலான குடிமனைகளை அமைத்துக் கொடுத்தல்.
- ஏனைய பிரதேச ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சகல உதவிகளையும் (கடன் திட்டம்) வழங்குதல்
- கடந்த 30 வருடமாக இம் மாவட்டத்திற்கு வழங்க தடை செய்யப்பட்டிருந்த உப கரணங்களை முழுமையாகச் சகல பாடசாலை களுக்கும் வழங்குதல்

இவ்வாறான உதவிகள் வழங்கப்படுமிடத்து இம் மாவட்டக் கல்விநிலை குறுகிய காலத்துக்குள் உயர்வடைவது சாத்தியமாகும். இந்நாட்டின் மிகப் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகக் கருதி உதவிகள் அதிகளவில் வழங்கப்படுவது மிக முக்கியமானது.

கல்வி அபிவிருத்தி என்பது தனியே கல்வித் திணைக்களத்திற்கு உரியதல்ல. ஒரு மாவட்டத்தின் திணைக்களங்கள் அனைத்தினதும் பூரண ஆதரவோடு செயற்படும் நிகழ்வாகும். தமது பிள்ளைகளின் கல்விநிலையில் சகல மக்களும் ஒன்று சேர்ந்து செயற்படும்போது தான் அது வெற்றியளிக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலை பின்தங்கி உள்ளதென்றால் அதனைச் சீர்செய்வது கல்வித் திணைக்களத்தின் பொறுப்பு மட்டுமல்ல. அம்மாவட்டத்தின் சகல மக்களது பொறுப்பாகும். அதிகரித்துச் செல்லும் மக்கள் தொகை , மாணவர் தொகைக் கேற்ப மேலதிகமான கட்டடத் தேவைகள் உள்ளன. நவீன தொழில்நுட்ப தேவைகள் உள்ளன. சர்வதேச தொடர்புகளுக்கேற்ப போட்டிபோட வேண்டிய தேவைகள் மாண வர்களுக்கு உள்ளன.

கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் முழுமனத்துடன் சேவைசெய்யக்கூடிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியப் பற்றாக்குறை ஏற்பட்ட போதெல்லாம் தோள்கொடுத்த

தொண்டர் ஆசிரியர்கள் பல வருடங்களாக நியமனம் இன்றி வாடுகின்றார்கள். பாதிக்கப்படாத மாவட்டங்களில் எல்லாம் தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் பெற்றபோதும் கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனம் செய்யப் படாமை வருத்தத்திற்குரியது. பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் உயர்கல்வி பெற்று பட்டதாரிகளாக வெளியேறிய வேலையற்றிருக்கும் கிளிநொச்சி மாவட்ட பட்டதாரிகளுக்காவது வேலைவாய்ப்பு வழங்கப்படுமானால் இம்மாவட்டத்தில் ஆசிரிய பற்றாக்குறை தவிர்க்கப் பட்டிருக்கும். எனவே கல்வி அபிவிருத்தி என்பது மாவட்டத்தின் நிர்வாகக் கடமைகளில் பொறுப்பு வகிக்கும் அனைவரதும் செயற்பாடாகும். அத்தகைய நிலைமை உருவாகும்போது கல்வி அபிவிருத்தி தானாகவே வந்துசேரும்.

# ஆறுதல் தந்தெமை வாழ வைப்பாய்

**இராகம் :–** ஹம்சத்வனி

**தாளம் :–** ஆதி

**பல்லவி**

**ஆறுதல் தந்தெமை வாழ வைப்பாய் – தாயே**
**அன்புடனே உன்னை அனுதினமும் – துதித்திட**

**அனுபல்லவி**

**வாய்மையும் நேர்மையும் வளர்ந்திடு செல்வமும்**
**வளமுடனே எனக்கு வழங்கிடுவாய் – தாயே**


**சரணம்**


**பச்சிலைப்பள்ளியின் பளைநகராம் பதியில்**
**பாங்குடனே அமர்ந்த பத்தினியாம் தாயே**
**இகபர சுகம் பெற இரட்டைக் கேணியில்**
**இன்னருள் புரியும் கண்ணகையாம் தாயே**

**திருமதி இந்துமதி சிறிஸ்கந்தராஜா**
பெரியபளை - பளை.

## தேசிய வாசிப்புமாத, உள்ளூராட்சி வார நிகழ்வுகள்







# பச்சிலைப்பள்ளியின் பொருளாதார வாழ்வு

பச்சிலைப்பள்ளி வரலாற்றுத் தொன்மைமிக்க நகரங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது என்பது பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொன்மைமிகு நகரத்தினைச் சார்ந்து வாழ்ந்து வரும் மக்களின் பொருளாதாரச் செயற்படுநிலை பற்றி விசேடமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.


***அமரசிங்கம் கேதீஸ்வரன்***

*BA ( Hons) MPhil ( Econ)*

*உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,*

*மாவட்ட செயலகம், கிளிநொச்சி.*


167.84 சதுர கிலோமீற்றர் நில விஸ்தீரணத்தைக் கொண்ட இப் பிரதேசமானது 18 கிராம அலுவலர் பிரிவுகளையும், 42 கிராமங்களையும் கொண்டிருக்கின்றது. பொருளாதார ரீதியில் வளங்களில் முதன்மை யானதாக நிலவளமும், மனித வளமும் காணப்படு கின்றன. நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு நெல் விவசாயமும் , தெங்குச் செய்கையும் முதன்மை யானதாக இடம் பெறுகின்றது. 942 ஹெக்ரெயர்களில் நெல் விவசாயம் இடம்பெறுவதுடன் 110 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மறுவயல் பயிர்களான மிளகாய், கௌபி, பயறு , உழுந்து, கச்சான், சோளம், மரக்கறி, வெங்காயம் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆக்கத்திறன் நோக்கிய நிலப் பயன்பாட்டில் தெங்குச் செய்கையே முதன் மையான நிலப்பயன்பாட்டைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் 4000 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் தற்போது தெங்குச் செய்கை இடம்பெறுகின்றது. நிலப் பயன் பாட்டின் அதிகம் பாவிக்கப் பட்டுள்ள மற்றொரு பயிராகப் பனை வளர்ப்பைக் கருத முடியும். 130,000 பனைமரங்கள் இப்பிரதேசத்தில் காணப்படுவதாக மதிப்பீடுகள் தெரி விக்கின்றன. எனினும் பனை இயற்கையாக வளரும் பயிராகவே தொடர்ந்து இருந்து வருகின்றது. யுத்தத்தினால் வயது முதிர்ந்த பனைகள் பெருமளவில் அழிவடைந்து உள்ளன. எனினும் பல இளைய மரங்கள் மிக அடர்த்தியாக இப்போது வளர்ந்து வரு கின்றன. திட்டமிடப் படாத பனைகள் காரணமாக இவை மக்களால் அழிக்கப்பட்டு வருவது கவலைக்குரியதாகும். விவசாய முயற்சிகளில் பழப்பயிர்களின் பயன்பாடு காணப்படினும் மாமரங்கள் மட்டுமே பெருமளவில் காணப் படுகின்றன. ஏனைய பயிர் வகைகள் மிகக்குறுகிய நிலப்பரப்பிலேயே செய்கை பண்ணப்படுகின்றன. இதிலும்கூட குரங்குகளின் தொல்லையால் பெருமளவு அறுவடை வீணடிக்கப்பட்டு வருகின்றது.

பச்சிலைப்பள்ளியில் அடுத்துக் காணப்படும் வளமாக நீர்வளத்தைக் குறிப்பிட முடியும். இங்கு கிளாலி தொடக்கம் கட்டடி வரையிலுமான கடல்நீரேரிகளான ஆனையிறவு, கிளாலி கடல் நீரேரிகள் காணப்படுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு 282 குடும்பங்களைச் சேர்ந்த 1072 மீன்பிடியாளர்கள் மீன்பிடியைப் பிரதான தொழிலாக மேற்கொள்வதுடன் நன்னீர்வளம் என்ற வகையில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் 114 காணப்படுகின்றன. இதில் பல குளங்கள் புனரமைக்கப்படாது கைவிடப் பட்டுக் காணப்படுகின்றன. நிலத்தடி நன்னீர் எல்லாப் பிரதேசத்திலுமே காணப்படு வதால் குடிநீர் பிரச்சினை இல்லையாயினும் சிறிய குளங்களின் அபிவிருத்தியே மானாவாரி நிலச்செய்கையை உத்தரவாதப்படுத்தும் என்பதால் சிறியகுளங்களின் அபிவிருத்தி இப்பிரதேச நீர்மூலத்தின் அபிவிருத்தியாக அமைய முடியும்.

அடுத்து முக்கிய வருமானம் வழங்கும் துறையாக கால்நடைத் தொழிலைக் குறிப்பிடமுடியும். மாடு, ஆடு, கோழி போன்ற வருமானம் தரும் உயிரினங்கள் வளர்க்கக் கூடிய சூழல் இங்கு பொருத்தமாகவுள்ளது. எனினும் போதிய உயிரினங்கள் இல்லையென்பது ஒரு குறையாகும். இடப்பெயர்வுக்கு முன்னர் 2500 மாடுகள் இப் பிரதேசத்தில் இருந்தன. தற்போது 475 மாடுகள் மட்டுமே இங்கு காணப்படுகின்றன. அதேபோல ஆடுகளில் 1230 இருந்தபோதும் தற்போது 340 ஆடுகள் மட்டுமே இங்கு காணப்படுகின்றன. 7025 கோழிகள் காணப்பட்ட இப்பிரதேசத்தில் தற்போது 4000 வரையிலான கோழிகளே காணப்படுகின்றன. இவ்வகையில் புதிய முதலீடுகள் உயிரின வளர்ப்புத் துறைக்குத் தேவையாகவுள்ளது.

அடுத்து வாழ்வாதாரத்துக்கு உதவும் துறையாக கைத்தொழில் துறையைக் கருதமுடியும் எனினும் பாரிய கைத்தொழில் முயற்சிகள் எதுவுமே இப்பிரதேசத்தில் மீள ஆரம்பிக்கப்படவில்லை. குடிசைக் கைத்தொழில் என்ற வகையில் தும்பு, தென்னை சார் உற்பத்திகளும் உணவு பதனிடலுமே சிறப்பாக இயங்குகின்றன.

பொருளாதார வளத்தை உந்தித்தள்ளி புதிய முதலீடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படக் கூடிய பிரதான வளமாக மனித வளத்தைக் கருத முடியும். தற்போது 3287 குடும்பங்களைச் சேர்ந்த 11542 பேர் தற்போது மீளக்குடியமர்ந்துள்ளனர். முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில் பகுதிகளில் மேலும் 1000 வரையான மக்கள் மீளக்குடியமர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் தற்போது 360 வரையான மூளை உழைப்பாளர்கள் காணப்படுவதுடன் திறன்வாய்ந்த தொழிலாளர்கள் வகையில் 2500ற்கும்

மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர். திறன்குறைந்த 4000 வரையான ஊழியப்படை இங்கு காணப்படுகின்றது.


இவ்வகையில் பல்வேறு வாய்ப்பான சூழ்நிலை காணப் படுவதுடன் பொருளா தார அபிவிருத்தியை மேலும் உந்தித் தள்ளக்கூடிய வகையிலான உட் கட்டுமான வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுவது அவசியமாகும். மின்சார வழங்கலில் உயர் அழுத்த மின்கோபுர வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் 05க்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள் மின்சார வழங்கலைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை முழுக் கிராமங்களுக்குமே விஸ்தரிப்பது அவசியமான ஒரு உட்கட்டமைப்பு விடய மாகும். அதனைவிட பொருளாதாரத் தூண்டுதலை நிர்ணயம் செய்யும் மற்றொரு அம்ச மாக உள்ளூர்வீதி வலையமைப்பைக் குறிப்பிடமுடியும். 20 கிலோமீற்றர் நீளமான A தர வீதிகள் தற்போது காப்பெற் வீதியாகக் காணப் படுவதுடன் 24 கிலோமீற்றர் நீள மான B தர வீதிகளும் 445 கிலோமீற்றர் நீளமான பிரதேச சபைகளுக்குச் சொந்தமான உள்ளூர்வீதிகளும் 9.5 கிலோமீற்றர் நீளமான விவசாய வீதிகளும் காணப்படுகின்றன. தபால் சேவை என்ற வகையில் பிரதான தபாலகமும் 03 உப தபாலகங்களும் காணப் படுவதுடன் பிரதான தொலைத்தொடர்புக் கோபுரங்கள் 2 அமைக்கப்பட்டுள்ளதால் செல்லிடத் தொலைபேசிகள் 6500 வரையில் இங்கு செயற்பாட்டில் இருந்து வரு கின்றது. உள்ளூர் சேவைகளில் 3 மினிபஸ்களும் 9 லொறிகளும் 25 இரு சக்கர உழவு இயந்திரங்களும் 50 வரையான உழவியந்திரங்களும் 35 ஆட்டோக்களும் 150 மோட்டார் சைக்கிள்களும் இங்கு காணப்படுகின்றன.

சமூக மூலதனத்தை உறுதிசெய்யும் வகையில் சிறந்த மனிதவளத்தை உருவாக்குவதற்கான உட்கட்டமைப்பாகக் காணப்படும் சுற்றயல்கூறு மருத்துவ மனை ஒன்றும், இரண்டு ஆயுள்வேத வைத்தியசாலைகளும், இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்குவதுடன் தனியான வருமுன் காக்கும் பிரிவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். கால்நடைகளுக்குரிய தனியான அரச கால்நடை வைத்தியநிலையம் இயங்குவதுடன் ஆயுள்வேத வைத்திய சேவையையும்பெறக்கூடிய தாக உள்ளது. கல்விசார் செயற்பாடுகள் என்றவகையில் 1AB தரத்தில் ஒரு பாடசாலையும் 1C தரத்திலான 04 பாடசாலைகளும் வகை III தரத்திலான 08 பாட சாலைகளுமாக 13 பாடசாலைகளில் முகமாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் இயங்கி வருவதுடன் 2275 வரையான மாணவர்களுக்கு 198 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

மனிதவளத் திறனுயர்வில் பங்குகொள்ளும் சமூக உட் கட்டமைப்பு கூறுகளான மக்கள் அமைப்புக்கள் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. 22 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 18 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 13 விளையாட்டுக் கழகங்களும், 04 இளைஞர் கழகங்களும், 03 கூட்டுறவுச் சங்க அமைப்புக்களும், 01 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனமும், 03 வங்கிகளும், 13 கலாச்சார மன்றங்களும் இயங்குவதனூடாக மக்கள் பங்கேற்புக்கும் சமூக அபிவிருத்திக்குமான தூண்டுதலும் வழங்கப்படுகின்றன. தனிமனித அபிவிருத்தியில் உளரீதியான உறுதிப்பாட்டை நிறுவு வதில் ஈடுபட்டுள்ள 47 சைவ ஆலயங்களும், 20 கத்தோலிக்க ஆலயங்களும் குறிப்பிடத் தக்கவை. இவ்வகையில் உள்ளகவாரியாக சிறந்த பொருளாதார வளர்ச்சியை நிர்ண யிக்கக் கூடிய உட்கட்டமைப்பு வளர்ச்சியடைந்து வருவதுடன் நவீன முதலீட்டு வாய்ப் புக்கான புறச்சூழலும் காணப்படுவது அவதானிக்க வேண்டிய முக்கிய அம்சமாகும். பச்சிலைப்பள்ளி சமூகத்தின் பல்வேறு கிராமங் களிலிருந்தும் புலம்பெயர்ந்து ஐரோப்பா விலும் ஏனைய நாடுகளிலும் நிரந்தரமாகிப் போனவர்களால் அனுப்பப்படும் வெளிநாட்டு நாணய மாற்றுக் காரணமாக உள்ளூர் முதலீடுகள் பல புதிய உத் வேகத்துடன் இடம்பெற்று வந்தாலும் பொருத்தமான தொழில்நுட்பத் துறைகளிலும் பாரிய கைத்தொழில் முயற்சிகளிலும் இடப்படவில்லை என்பது கவலைக்குரியதாகும். தெங்கு வளர்ப்புத் துறையில் இடம்பெற்றுவரும் மீள்முதலீடானது வெகுவிரைவில் பல தெங்கு உரிமை யாளர்களைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கலாம். அதனூடாக தென்னைசார் சிறப்புத்தேர்ச்சியுடைய ஒரு கிராமம் என்ற பழைய பெயரை மீள நிலைநிறுத்திக் கொள்ளமுடியும்.



தேசிய வாசிப்புமாத, உள்ளூராட்சி வார நிகழ்வுகள்







## தேசிய வாசிப்புமாத, உள்ளூராட்சி வார நிகழ்வுகள்






# உண்மைக் காதலைக் காணமுடியும்

*கண்ணுக்கு மையிட்டு*
*கவிதை எழுத*
*பேனாவை எடுத்தேன்*
*பேனா கூறியது*
*பொய்யைத் தானே – என்னால்*
*எழுதப் போகின்றீர்கள்*
*வீணாக என் உடம்பில்*
*உள்ள இரத்தத்தை*
*வீண் விரயமாக்காதீர்கள்*
*என்று – அதற்கு*
*என் பெருவிரலும்*
*சுட்டு விரலும்*
*பொய்யை எழுதவில்லை*
*என் உண்மைக் காதலை*
*எழுதப் போகின்றேன் என்றது*
*சரி என்று பேனா*
*தன்னை – அந்த ராணி மகள்*
*றெசிந்தாவின் கையில்*
*அர்ப்பணித்தது*
*ஊற்றெடுத்தது அவளின்*
*சிந்தனைகள்*
*பார்த்த உடனே மயங்கிப் போனால்*
*வாழ்க்கை தான்*
*மழுங்கிப் போகும்*
*பாவப்பட்டு இரங்கிப்போனால்*
*சந்நியாசி ஆகமுடியும்*
*ஆசைப்பட்டு வாழப்போனால்*
*அரைமனிதர் ஆகமுடியும்*
*ஏழை வீட்டில் வாழப் போனால்*
*அன்பு வாழ்க்கை*
*அமைந்து விடும் – அந்த*
*அன்பு வாழ்க்கையில்*
*என் உண்மைக் காதலைக்*
*காண முடியும்.*

**ராணிமகள் றெசிந்தா**
*சங்கத்தார்வயல்,*
*இயக்கச்சி.*

# அழியாத நினைவுகள்

எப்போதும் இல்லாத அளவுக்கு மக்கள் கூட்டம் அக்கிராமத்தின் மத்தியில் அலைமோதிக் கொண்டிருந்தது. மின்விளக்குகள் வீதியினையும், அச்சூழலையும் அழகுபடுத்திக் கொண்டிருந்தது. மணிக்கடைகள், மிட்டாய் கடைகள், தேநீர் கடைகள், ஐஸ்கிறீம் வான்கள், கச்சான் வியாபாரிகள் எனப் பலநூறு கடைகள். மரங்களில் தொங்கியவாறு மின்னும் றண்ணிங் பல்புகள். அத்தனை அழகுடனும் நீலம், வெள்ளைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட அந்தச் சூழல் தூய்மையையும், அமைதியையும் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தது.


**செல்லையா நாகசெல்வம்**
ஆலய வளாகம்
வண்ணாங்கேணி வடக்கு. பளை.


ஆம் ! அது வேறு எங்கும் அல்ல. கிளிநொச்சியையும், யாழ்ப்பாணத்தையும் இணைத்து நிற்கும் ஓர் அழகிய கிராமம் தான் முகமாலை. A – 9 வீதியைத் தன்னகத்தே கொண்ட இந்தக் கிராமத்தின் இதயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை வேளாங்கன்னி ஆலயத் திருவிழாவில் தான் அந்த மக்கள் கூட்டம்.

திருவிழாக் காலங்களில் இவ்வாலயத்திற்கு வரும் மக்களால் அக்கிராமமே மகிழ்வடையும். அத்துடன் அவ்வாலயச் சூழலிலும், அதன் அண்மைய பகுதி வீடு களிலும் மக்கள் நிறைந்து காணப்படுவர். ஆலய வளவில் உள்ள ஆலமரம், வேப்ப மரம், வாகை மரம் என்பவற்றின் கீழ் மக்கள் கூடாரம் அமைத்துத் தங்கி நின்று திருவிழா திருப்பலியில் பங்கு கொள்வது வழமை.

இன்றைய தினம் மக்கள் அதிகமாகவே காணப்பட்டனர். காரணம் நாளை காலை அன்னைக்கான திருவிழா திருப்பலியுடன் முடிவடையவுள்ளது என்பது தான். இரவு திருப்பலியை முடித்த மதன் எதையோ தேடி அலைவதைக் கண்ட நண்பன் தீபன் “என்ன மச்சான் உன்ர ஆளையே தேடுறாய், அவள் மணிக்கடைப் பக்கமாகப் போகிறாள் ”என்றான். “அப்ப வா மச்சான் நாங்களும் போவம்” என்றான் மதன். இரு வரும் மணிக்கடைப் பக்கம் சென்றனர்.

மதன் மிகவும் அழகானவன். கலகலப்பான பேச்சுடையவன். பார்ப்பதற்கு நடிகன் போன்று காணப்படுவான். அவன் பளை

மகாவித்தியாலயத்தில் தரம் 13 இல் கல்வி கற்று வந்தான். இவனது குடும்பம் முகமாலையிலேயே உள்ளது. வசதியான குடும்பம். தந்தையார் ஓர் உழவு இயந்திரம் வைத்து தொழில் செய்து வருகின்றார். ஐந்து ஏக்கர் தென்னங்காணியும் மூன்று ஏக்கர் வயல் காணியும் உள்ளதால் பொருளா தாரத்தில் உயர்ந்து காணப்பட்டனர். பெரிய கல்வீடு. தாயார் வீட்டு வேலைகளைச் செய்வதில் அவரது காலம் போகும்.

மதனுக்கு ஓர் அக்கா : இரண்டு தம்பி : ஓர் தங்கை என எப்போதும் கல கலப்புடன் காணப்படும் அவனது குடும்பம். மதனின் தங்கையும் பளை மகாவித்தி யாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்று வருகின்றாள்.

மணிக்கடை நோக்கி விரைந்து சென்ற மதன் தன் நடையைச் சற்றுக் குறைத் துக் கொண்டான். அங்கே மணிக்கடை முன்பாகத் தனது தங்கையுடன் மதனின் ஆள் ஏதோ கதைப்பதைக் கண்டுகொண்டான்.

அவள் தான் எழில். இவள் வடமராட்சியைச் சேர்ந்தவள். தனது 10ம் தரம் தொடக்கம் தற்போது கற்கும் தரம் 11 வரை பளை மகாவித்தியாலயத்தில் கற்று வரு கின்றாள். இவள் படிப்பில் மிகவும் அக்கறை உள்ளவள் என்பதால் இவளின் பெற்றோர் இவளைப் பளையில் உள்ள தமது உறவினர் வீடு ஒன்றில் தங்க வைத்துப் படிக்க வைத்தனர்.

எழில் மிகவும் அழகானவள். பெயருக்கு ஏற்ப அழகும், அன்பும் கொண்டவள். பார்ப்போரைத் தீண்டி இழுக்கும் பார்வை கொண்டவள். எப்பொழுதும் அமைதியுடன் காணப்படுவாள். இவளுக்கு ஒரு அண்ணன் : ஒரு தம்பி : ஒரு அக்கா என மிகவும் அழ கான குடும்பம். இவளது தந்தை ஒரு வர்த்தக நிலையம் நடத்தி வருகின்றார். அண்ணா தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராகப் பணிபுரிந்து வருகின்றார்.

மதன் வருவதைக் கண்ட எழில் "யேய் பிரியா உன்னுடைய அண்ணா வாறார்" என்றாள். "நில்லுங்கடி ஆளைக் கூட்டி வாறன் ஐஸ்கிறீம் குடிப்பம் " என்று கூறியபடியே மதனை நோக்கி "அ ண்ணா இங்க வா" என்றாள். 'ஏன்டி நீ வரமாட்டியா' என்றான் மதன். 'சரி சரி அத விடு இப்ப எல்லாருக்கும் ஐஸ்கிறீம் வாங்கித் தரவேணும்' என்றாள் பிரியாவின் நண்பி சர்மி. 'சரி எல்லாரும் வாங்கோ' என்றபடி மதன் ஐஸ்கிறீம் வானை நோக்கி நடந்தான். அனைவருக்கும் ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்த மதன் ஐஸ்கிறீம் வான் நிற்கும் இடத்திலுள்ள மரக்குற்றி ஒன்றின்மீது அமர்ந்து ஐஸ்கிறீமைப் பருகினான்.

நேரம் இரவு 12.00 மணியை அண்மித்துக் கொண்டதால் அதிகாலை திருப் பலிக்கு வரவேண்டும் என்பதால் மக்கள் கூட்டம் குறைந்து கொண்டது. அனைவரது கைகளிலும் ஏதாவது ஒரு பொருள் இருந்தது. வீட்டுக்கான சமையல் உபகரணங்கள், பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் என ஏதாவது ஒன்றைக் கையில் எடுத் துச் சென்றபடியே இருந்தனர்.

ஐஸ்கிறீமைக் குடித்துக் கொண்டு இருந்த மதன் எழிலுடன் கண்களால் கதை பேசினான். ஒருவாறு எழிலுக்குக் கொடுக்க என வாங்கி வைத்திருந்த நீல முத்துக் களால் ஆன செபமாலையை அவளின் கையில் கொடுத்து விட்டான். மக்கள் கூட்டம் ஓய்ந்து ஆலயம் அமைதியாகக் காணப்பட்டது.

திருவிழாவின் மறுநாள் பாடசாலைக்குச் சென்ற எழில் கிணற்றடிக்குத் தண்ணீர் குடிக்கச் சென்ற வேளை அலரி மரத்தின் மறைவில் நின்று தனது காதல் கடிதத்தை மதனிடம் கொடுத்தாள். பாடசாலை முடித்து வீடு சென்ற மதன் தனது அறையில் சென்று எழில் கொடுத்த கடிதத்தைப் படித்தான்.

அன்புடன் மதன் அறிய நலம் நலம் வேண்டுகின்றேன்.

இக்கடிதத்துடன் உம்மிடம் நான் சில மாற்றங்களைக் காண விரும்புகின்றேன். என்னைப் பொறுத்தவரை எனக்கு ஏற்பட்ட முதல் காதல் இது. இதனை எவராலும் பிரிக்கவோ அழிக்கவோ முடியாது. ஆனால் எனக்கு இப்போ தேவை கல்வி மட்டுமே. நாம் இப்போது மாணவர்களாகவே இருக்கின்றோம். நிறையச் சாதிக்க வேண்டும். நிறையப் படிக்க வேண்டும். எம்மைப் படிக்க வைக்கும் பெற்றோர், ஆசிரியர்களுக்கு நாம் விசுவாசமாக இருக்க வேண்டும். என்மீது கொண்ட நம்பிக்கை காரணமாகத்தான் எனது பெற்றோர், சித்தப்பாவின் வீட்டில் தங்க விட்டிருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு துரோகம் செய்ய என்னால் முடியாது.

அதுபோல் என்னைக் காதலிக்கும் உன்னையும் என்னால் விட்டு விட முடியாது. யார் எப்படியோ ? நாம் படிப்பை மட்டுமே குறியாக வைத்துப் படிக்க வேண்டும். எனவே பாடசாலை நேரங்களில் நூலகத்திலோ அல்லது ஆய்வுகூடத்திலோ பாடசாலை வளாகத்திலோ என்னுடன் கதைப்பதை தவிர்த்து கொள்ளவும்.

நாம் படித்து நல்ல தொழில் வாய்ப்பினைத் தேடிக்கொள்வோம். அதன் பின்னர் எனது பெற்றோரின் சம்மதம் இல்லை என்றாலும் கூட நான் உன்னைத் திருமணம் முடிக்கத் தயார். அதுவரை உனக்காக நானும் எனக்காக நீயும் காத்திருந்தபடி எமது கல்வியைத் தொடர்வோம். இதுவே என் ஆசை. இதை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்பு கின்றேன்.

நன்றி

அன்புடன்
**என்றும் எழில்**

கடிதத்தைப் படித்து முடித்த மதனின் மனதில் ஓர் நிம்மதிப் பெருமூச்சு. என்னைத் தப்பாக நினைத்து ஏற்க மறுத்து விடுவாள் என்று எண்ணியவன் அவளின் மனஉறுதியை எண்ணி மனம் மகிழ்ந்தான். தான் நேசிக்கும் எழிலின் மனதில் இப்படி யான ஓர் ஆதங்கம் , நம்பிக்கை இருக்கின்றபோது அதனை நான் வீணடிக்கக் கூடாது. அவளுக்கு உந்துசக்தியாக இருக்க வேண்டும் என எண்ணிய மதன் அன்று முதல் அவளை அடிக்கடி சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டான்.

காலம் நகர்ந்தது. இருவரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். எழில் கலைத்துறையிலும் மதன் வணிகத்துறையிலும் கற்றனர். இதனால் இருவரும் நேரில் காணும் வாய்ப்பு மிகவும் குறைவாகக் காணப்பட்டது. இடையிடை நடைபெறும் கூட்டங் களிலும் விடுமுறை நாட்களிலும் சந்தித்துக் கொண்டனர். இவர்களின் கல்விவளர்ச்சி போல காதலும் வளர்ந்தது. பட்டப்படிப்பினை முடித்த எழில் தான் கற்ற பாடசாலைக்கே ஆசிரியராகப் பணிக்கு வந்தாள்.

அதே போல் பட்டப்படிப்பினை முடித்த மதன் பளை உதவி அரச அதிபர் பிரிவில் சமூக நல உத்தியோகத்தராகப் பணிபுரிந்து வந்தான். இப்போது இருவரும் ஓர் நல்ல சமூகப் பணியில் இருப்பதை எண்ணி இவர்கள் மகிழ்வடைந்தனர்.

எழில் தன் பாடசாலைக் காதலை இடையிடையே மீட்டுப்பார்த்தாள். ஆனாலும் அவர்கள் அன்று கண்டு கதைத்த கிணற்றடி, ஆலமரம், விஞ்ஞான ஆய்வுகூடம் , நூல்நிலையம் அனைத்தும் மாறிக் காணப்பட்டது. பாடசாலை வானுயர வளர்ந்து மிளிர்ந்தது. பாடசாலையும் உயர்ந்து மத்திய கல்லூரி ஆனது.

காலம் கனிந்து வர மதன் எழில் காதல் இருவீட்டாருக்கும் தெரிய வரவே எந்த விதமான தடையும் இன்றித் திருமணத்திற்கு சம்மதம் கிடைத்தது. திருமணநாளும் குறிக்கப்பட்டது. இருவீட்டாரும் தீவிர திருமண வேலையில் ஈடுபட்டனர். ஆனால் எழில் மதன் மனதில் தான் மிகப்பெரிய கவலை கடந்த காலங்களை மீட்டுப் பார்த்தனர். நெஞ்சம் கனகனத்தது.

ஆம் ! மதன் எழிலைக் காதலித்தபோது முகமாலை அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் சத்தியம் செய்து கொண்டனர். எத்தனை தடைகள் வரினும் எம் காதலை நீ சேர்த்து வைக்கவேண்டும். எங்களது திருமணம் உனது ஆலயத்தில் தான் நாம் செய்துகொள்வோம் என்று. ஆனால் அவர்கள் நினைத்தபடி காதல் கல்யாணம் வரை சென்றுவிட்டது. ஆனால் அவர்கள் கைபிடிக்க நினைத்த அந்தக் கருணைத்தாய் கண்டதுண்டமாகக் கிடப்பதை எண்ணி கண்கலங்கினர். இனி என்ன தான் செய்வது ஏதாவது ஒரு கோவிலில் கைபிடிப்பது என முடிவு செய்தனர்.

இப்படி எத்தனை ஜீவன்களின் வாழ்வில் அழியா நினைவுகள் கரைபுரண்டு ஓடு கின்றன. எழில் மதன் வாழ்வும் அப்படித் தான் விதியோடு மோதி இன்று இல்லற பந்தத் தில் இணையும் இவர்கள் என்றும் நீடூழி வாழ்க. நண்பர்கள் கூட்டம் சூழ்ந்துகொள்ள பெற்றோர் உறவினருடன் மாதா ஆலயம் ஒன்றில் இருவரும் கரம்பிடித்தனர். திருமண பந்தத்தில் இணைந்த மதன் எழில் தம்பதியினர் அழிந்து போன அன்னை வேளாங் கன்னியின் புனரமைப்புக்காக தமது சம்பளப் பணத்தில் லட்சம் ரூபாவை நன்கொடை யாகக் கொடுத்தனர். இப்போது அவர்களின் மனங்களில் ஓர் நிம்மதி என்றோ ஓர்நாள் எம் அன்னை புத்துயிர் பெறுவாள். அப்போது எம் பங்களிப்பில் ஏதாவது ஓர் பணி நடக்கும். அந்தப் பொன்னாளை எண்ணி நாமும் பயணிப்போம்.

முகமாலை ஊர்

**செ.நாதன்**



தேசிய வாசிப்புமாத, உள்ளூராட்சி வார நிகழ்வுகள்





# சித்த வைத்தியத்தின் தொன்மையும் வன்மையும்

**வைத்தியகலாநிதி**
**நாகரத்தினம் கணேசலிங்கநாதன்**
டீ. ஏ.எம்.எஸ் இலங்கை
சித்த மருத்துவர்
வட்டுக்கோட்டை

ஒல்காப் புகழ் படைத்தது சித்த வைத்தியம். பதினெண் சித்தர்களால் செய்யப் பட்டது. ஆதியில் ஓதப்பட்ட முதனூல்.

முதனூல் பற்றி நன்னூல் இவ்வாறு கூறும்.

*"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதனூலாகும் "*

எனவே வினையின் நீங்கி விளங்கிய அறிவினை உடைய முதல்வன் ஆகிய இறைவனால் அருளப்பட்டது.

பதினெண் சித்தர்களில் ஒருவரான யூகி முனிவர் 'வாத காண்டம் ஆயிரம் 'என்ற பாடலில் இவ்வாறு அழகாகக் கூறியுள்ளார். அவர் மெய்ப்பொருளை உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர்.

*"வரைந்திட்டேன் சிவன் உமைக்கு மகிழ்ந்து சொல்ல*
*வகையாக உமைதானும் நந்திக்கு*
*தரைந்திட்டு நந்நி அசுவனிக்குச் சொல்ல*
*தாட்டிகமாய் அசுவனியும் விசுவனிக்குச் சொல்ல*

*பரைந்திட்டு விசுவனியாம் தேவரிடியும்*
*பாசமாய் தன்வந்தரிக்குப தேசிக்க*
*அரைந்திட்ட தன்வந்திரி அகத்தியருக்கு*
*ஆதியாம் அகத்தியரும் அன்பாய்த்தானே.*

*அன்பாக அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்ல*
*ஆதியாம் புலத்தியரும் தேரருக்குச் சொல்ல*
*தென்பாகத் தேரருமே யூகிக்குச் சொல்ல*
*திரமான யூகியுமே உலகத்தோர்க்கு.*

எனப்பாடல் கூறி நீண்டு செல்கின்றது. சீவனைச் சிவமாக்கும் உபாயமாக சித்தர்களால் சிறப்பாகக் கைக்கொள்ளப்பட்டது சித்த வைத்தியம். சித்த வைத்தியத்திற்கு பதினெண் சித்தர்களே ஆதார கர்த்தாக்களாக விளங்குபவர்கள். வாழையடி வாழையாக சித்தர் மரபு வியாபித்திருந்துள்ளது. இப்பரம்பரையில் வந்தவர்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

சில நூல்களில் அகத்தியர், நந்தீசர், திருமூலர், சம்பந்தர், இடைக்காடர், இராம தேவர், சிவாக்கியர், கோரக்கர், புண்ணாக்கர், மச்சமுனி, பூனைக்கண்ணர், சண்டி கேசர், யூகிமுனி, கொங்கணவர், புலிப்பாணி, வரரிஷி, தேரையர் எனப் பதினெண் சித்தர்களைக் குறிப்பிடுவர். சில நூல்கள் ஒரு சிலரின் பெயர்களை மாற்றிக் குறிப்பிடும். சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள். எட்டுவகை சித்துகளும் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள். இவர்களில் சிலர் எமது ஈழமணித் திருநாட்டிலும் இருந் துள்ளனர். தென்கயிலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணமலையில் இவர்கள் வாழ்ந்துள்ளனர். கம்பராமாயணத்தின் யுத்தகாண்டத்தின் கும்பகர்ணன் வதைப் படலத்தில் ஒரு செய்யுள் கூறும்

*"புலத்தியன் வழி முதல் வந்த பொய்யறு*
*குலத்தியல்பு"*

எனவே புலத்திய முனிவரின் பேரன் இராவணன் அறுபத்து நான்கு கலைகளையும் நன்கு கற்றுத் தேறியவன். சித்த வைத்தியத்திலும் மேம்பட்டவன். புலத்தியரும் பதினெண் சித்தர்களில் ஒருவர். ***"குலவித்தை கல்லாமலே பாகம் படும்"*** என்பது பழமொழி. எனவே இராவணனும் சிறந்த சித்த வைத்திய மேதை என்பது வெள்ளிடை மலை. யூகிமுனியின் அன்னை வளம் பொருந்திய மலைநாட்டைச் சேர்ந்தவர் என்பதை யோகர் சத்த காண்டம் கூறும். ஆடி அமாவாசை முன் தினத்தன்று மகாவலிக்கரையில் திருக்கரசைப் புராணம் படித்துப் பயன்கூறுவார்கள். அடுத்தநாள் ஆடி அமாவாசை விரதம் அனுட்டித்து மகாவலியில் தீர்த்தமாடுவார்கள். இது பாரம்பரியமாகக் கைக் கொள்ளும் வழக்கம். அகத்தியர் இங்கு வசித்ததாகவும் அப்புராணம் கூறும். அகத்தியர் தாபனம் என்ற இடமும் உண்டு. எனவே சித்தர்கள் இலங்கையிலும் இருந்துள்ளனர். கோணேசப்பெருமானின் அருள் வேண்டியும் நின்றார்கள். கோரக்க முனிவரும் இவர் களில் ஒருவர். தீர்த்தம் ஆடும் காட்டாற்றுக் கரையில் அன்று எவருக்கும் விச ஜந்துக்கள் தீண்டுவதில்லை என்பது அதிசயிக்கக்கூடிய அற்புதம்.

எனவே இலங்கை மண்ணில் சித்தவைத்தியம் நிலைபெற்றமைக்கு இவையும் ஆதார காரணமாக அமையும். இங்கும் சிறந்த மூலிகைகள் உண்டு என்பதில் ஐயமில்லை.

சித்தர்கள் சிறந்த அறிவியல் மேதைகளாக விளங்கியுள்ளார்கள். அண்ட பிண்ட தத்துவங்களை நன்கு அறிந்துள்ளார்கள். உடலியலையும், உடற்கூற்றியலையும் இயற்கையோடு இசைத்தும் அண்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் பிண்டத்திலும் ஏற்படும் என்பதையும் அறியிட்டுக் கூறியுள்ளார்கள். இதனை :

*" அண்டத்திலுள்ளதே பிண்டம்*
*பிண்டத்திலுள்ளதே அண்டம்*
*அண்டமும் பிண்டமும் ஒன்றே*
*அறிந்து தான் பார்க்கும் போதே"*

என்பது திருமூலர் திருமந்திர வாக்காகும்.

சராசரங்கள் உலக உயிரினங்கள், மற்றும் இயற்கைப் பொருட்கள் யாவும் இவ் வடிப்படையிலேயே அமைந்தனவே. மானிட உடலும் இவ்வடிப்படையிலே அமைந்தது. அண்டத்தில் பாதாளம், பூமி, ஆகாயம் அடங்கும். பிண்டம் ஐம்பூதக் கலப்பினால், சுக்கில, சுரோணிதம் உறக் கலத்தலால் அமைந்ததே உடல். சராசரம் அசையும் பொருளும் , அசையாப் பொருளுமாகும். அண்டம் ஐந்து பூதங்களால் ஆனது. இவ் அடிப்படைத் தத்துவத்தை சித்தர்கள் நன்கு கண்டறிந்துள்ளார்கள்.

பிருதுவி அம்சமாக பிண்டத்தில் எலும்பு , நரம்பு, தசை, தோல், உரோமம் என்பன உள்ளன. அப்பு அம்சமாக இரத்தம் கொழுப்பு, விந்து, சுரோணிதம், சிறுநீர், மூளை , என்பு மச்சை என்பன அமையும். தேயு அம்சமாக திமிர், சோம்பல், ஆணவம், பயம், துக்கம் என்பன அமையும். வாயு அம்சச் செயற்பாடாக ஓடல், நடத்தல், இருத்தல், படுத்தல், ஆடல் என்பன அமையும். ஆகாய அம்ச வெளிப்பாடாக காமம், குரோதம், மதம் (செருக்கு) மாச்சரியம் என்பன அமையும்.

ஐம்பூதங்களுக்கும் மனித உடலிலுள்ள உறுப்புகள், இயக்கங்கள் , உணர்வுகள் யாவற்றிற்கும் மிகநெருங்கிய தொடர்பு உள்ளதென்பதைச் சித்தவைத்தியம் அடிப் படையாகக் கொண்டுள்ளது. இயற்கையோடு இசைந்த வைத்தியம் சித்த வைத்தியம்.

ஐம்பூதங்களாலும், அவற்றின் இயக்கங்களாலும் பருவகாலங்கள் நிகழ்கின்றன. கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முது வேனிற்காலம் என ஆறு காலமும் இரு மாதத்திற்கு ஒருமுறை ஒரு ஆண்டிற்கு வரும். இம்மாற்றங்களால் அண்ட மாற்றம் ஏற்பட பிண்ட மாற்றம் ஏற்படும். இந்நிலையில் உயிரினங்களுக்கு நோய் ஏற்படும் என்பதைச் சித்த வைத்தியம் எடுத்தியம்பும். இக்கால மாற்றத்திற்கு வரும் நோய்களை இக்காலங்களுக்குரிய இயற்கை மூலிகைகளைக் கொண்டு நிவர்த்திக்கலாம் எனச் சித்த வைத்தியம் கூறும்.

மனித உயிரியக்கத்திற்கும் இயற்கையின் ஐம்பூதங்களுக்கும் உள்ள தொடர்பை சித்தர்கள் நன்கு அறிந்து வைத்து சிகிச்சை புரிந்தனர். மக்களுக்கு ஏற்படும் வாத, பித்த, கச நோய்களுக்கு இயற்கை வழியிலேயே ஐம்பூத தத்துவ அடிப்படையைக் கொண்டே மருந்துகளைக் கண்டறிந்தனர். சீவவர்க்க மருந்துகளைத் தனியாகவும், தாதுவர்க்க மருந்துகளைத் தனியாகவும் செய்துள்ளனர். அதிலும் அகமருந்து , புற மருந்து எனப் பகுத்து அவற்றின் அளவுகளையும், கால நியதியையும் கூறியுள்ளனர்.

அத்துடன் அமையாது யோக சாதனைகளையும் கூறியுள்ளனர். யோக சிகிச்சையாக பிரணாயாமம், யோகாசனம், தியானம் என்பனவும் கூறப்பட்டுள்ளது. பிரணாயாமம் என்ற மூச்சுப் பயிற்சி மூலம் மனம், வாக்கு, காயம் இம்மூன்றையும் சரிவர நடத்தமுடியும் என்பதையும் கூறியுள்ளனர். வாழ்வுக்கு ஆதாரமாகப் பலவித யோகா சனங்களையும், நோய் நீக்கும் சிகிச்சையாக எடுத்து இயம்புவது சித்தர்கள் கண்ட வைத்தியமே. யோகாசனப் பயிற்சி நோயணுகா வழியைக் காட்டி நிற்கும். சிறந்த நல்லாசானிடம் முறையாக யோகக் கலையைக் கற்றவர்கள் நோயில்லாப் பெரு வாழ்வைப் பெறலாம். சில்நாள் வாழ் பல்பிணி சிற்றறிவுடைய மக்களுக்கு பல்பிணி யணுகா நெறிமுறை யோகப் பயிற்சி என்று கூறினும் மிகையாகாது.

மூலாதாரத்தில் உள்ள அக்கினியை எழுப்பி ஆஞ்ஞைவரையும் கொண்டு சென்று அமுதம் பெற்று பல்லாண்டு நிட்டை கூடியிருந்து பல அரிய படைப்புக்களைப் படைத்தவர்கள் சித்தர்கள்.

சித்தர்களது பரிபாசையில்

*"மாங்காய் பல உண்டு மலைமேல் இருப்பவருக்கு*
*தேங்காய்ப்பால் ஏதுக்கடி - குதம், பாய்* என்பது குதம்பைச் சித்தர் பாடல்.

இதனையே ஔவையாரும் விநாயகர் அகவலில்

*"மூலாதாரத்தின் மூண்டெழு கனலை*
*காலால் எழுப்பி கருத்து அறிவித்து*
*அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்*
*குமுத சகாயன் குணத்தையும் கூறி "* என்ற அடிகளால் நன்கு அறியலாம்.

இந்தவகைப் பயிற்சியால் நோயணுகா வழிமுறையைப் பெறுவதுடன் , வந்த நோய்களும் இலகுவில் குணம் பெற வாய்ப்பு ஏற்படும். மனத்தைக் கட்டுப்படுத்தி அட்டமாசித்திகளையும் கைவரப் பெற்ற சித்தர்களால் தந்த அரும்பெரும் செல்வமே சித்த வைத்தியம். இவ்வைத்தியத்திற்கு உணவுப் பழக்கம் பத்தியமும் மிகமுக்கியமாக அமையும். வாத பித்த கப என்ற அடிப்படையில் உணவுகள் அமையவேண்டும். உணவைச் சுருக்கியும், விடுத்தும் விரதம் அனுட்டிப்பதுவும், ஒருவகைச் சிகிச்சை முறையே. "இலங்கணம் பரம ஔடதம்" என்பது வைத்தியப் பழமொழி. பத்திய முறை களை உரியமுறைப்படி கைக்கொண்டால் நோயில்லா பெருவாழ்வைப் பெறமுடியும்.

சித்த வைத்தியனாக அமைய சில குறிப்பிட்ட தகைமைகளையும் தேட வேண்டும். வைத்தியக் கல்லாடம்

*"சோதிடம் பஞ்ச பட்சி*
*துலங்கிய சர நூல் மார்க்கம்*
*ஓதறு வகார வித்தை*
*இவை உணராதான் வைத்தியனாகான் "*

எனக்கூறும்.

மேற்காட்டிய சித்தர்கள் நெறியில் தொன்மையைப் போற்றிப் பேணிக் காத்து சித்த வைத்தியத்தின் வண்மையைப் பேணி மென்மேலும் வளர்ப்போமாக !

# பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள ஆலயங்களும் அவற்றின் வரலாற்றுக் குறிப்புக்களும்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் விநாயகர் ஆலயங்கள், அம்மன் ஆலயங்கள், வைரவர் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள் என ஆலயங்கள் பல உள்ளன. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க ஊர்கள் தோறும் பல ஆலயங்களை அமைத்து இறைவனை வழிபட்டு வந்தார்கள். நாம் தப்போ தவறோ செய்தால் இறைவன் நம்மைத் தண்டிப்பான் என்று பயந்தார்கள். ஒரு சமு தாயம் நிம்மதியாக வாழ வேண்டுமாயின் மக்களிடம் இறைபக்தி ஏற்பட வேண்டும். இப் பிரதேசத்திலுள்ள ஏனைய ஆலயங்களின் மகிமையையும் வெளிக்கொணர நாம் முயற்சிக்க வேண்டும்.

**ந.தாமோதரம்பிள்ளை**
இளைப்பாறிய அதிபர்
பேராலை.

மல்வில் கிருஷ்ணன். இவ்வாலயம் இயக்கச்சிக்கு அண்மையிலுள்ள மல்வில் கிராமத்தில் அமைந்துள்ளது. எம்பெருமானது புதுமைகளை மக்கள் கூறக்கேட்டால் உள்ளத்தை உருக்கும். நான் கேட்டவற்றில் ஒன்றை மட்டும் தருகிறேன். கண்டாவளையைச் சேர்ந்தவர்: உப்பளத்தில் உழவுயந்திர சாரதியாகக் கடமையாற்றியவர்: பெயர் கணபதிப்பிள்ளை. அவர் கூறினார், ஐயா! எனது பிள்ளைக்குக் கடுமையான நோய் ஏற்பட்டது. நான் வைத்தியசாலையில் வைத்திருந்தேன். வைத்தியர்கள் "வீட்டுக்குக்

## காத்திருப்பு

இரவு காத்திருப்பது பகலை நினைத்து
பகல் காத்திருப்பது இரவை நினைத்து
ஆனால் – நான் காத்திருப்பது
உன்னோடு ஒன்றுசேர்வதற்கு.

**S.செல்வராணி**
சங்கத்தார்வயல்

கொண்டுபோகலாம்" என்றார்கள். 'பிள்ளையை ஆலயத்திலே கொண்டு வந்து வைத்திருந்தேன். பிள்ளை மூன்று நாளால் எழுந்து நடக்கத் தொடங்கிவிட்டான்' என்றார். "நான் இப்பொழுது ஐந்தாந் திருவிழாவை நடத்தி வருகிறேன்" என்றும் கூறினார். அவர் கூறிய செய்தி என் உள்ளத்தை உருக்கியது.

இவ்வாலயத்தில் சின்னையா என்பவர் பூசகராகக் கடமையாற்றி வந்துள்ளார். இவர் பூநகரி, தட்டுவங்கொட்டி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் முழுவதும் மாட்டுவண்டியில் சென்று மக்கள் கொடுக்கும் காணிக்கைகளை சேர்த்து வந்து ஆலயத்தை சிறப்பாக நடத்தி வந்துள்ளார். பெயர்தான் சின்னையா. செயலோ பெரியய்யா.

இவரைத் தொடர்ந்து சின்னத்தம்பி என்பவர் நீண்டகாலமாகப் பூசகராகக் கடமையாற்றியுள்ளார். இவருடைய பெயரும் சின்னத்தம்பி. செயலிலோ பெரிய தம்பியாகவே திகழ்ந்தார். இறைவனை வழிபட இலகுவான வழி அவன் மகிமையை பக்தி சிரத்தையுடன் பாடிப் பரவுவதேயாகும். நானும் சில கவிதைகளை எழுதினேன். அவற்றில் சிலவற்றை தலையே நீ வணங்காய் நிகழ்ச்சியில் வானொலியில் ஒலி பரப்பினார்கள். அப்பாடல்களில் பல மல்வில் கிருஷ்ணன் கவிதை மலரிலும் இருக்கின்றன. அவற்றில் இரண்டை இங்கு தருகின்றேன்.

*பச்சிலையில் பள்ளி கொள்ளும்*
*பரந்தாமா நீயே வந்து*
*பச்சிலைப் பள்ளியிலே*
*பள்ளி கொண்ட மாயமென்ன*
*எச்சிலை உண்டவனின்*
*மைத்துனனே கண்ணா நீயே*
*கற்சிலையாக நின்று*
*கருணை மழை பொழிவாய்*

*மல்வில் தலம் ஒருக்கால் வந்து தொழுமின் !*
*மாயவன் திருவருளைப் பெற்று உய்யுமின்*
*மந்தியினம் கொஞ்சி விளையாடும் சோலையில்*
*குந்தியின் மருகனவன் கோயில் கொண்டனன்*
*நாரணார் தேவியொடு ஆடும்வாவியில்*
*நாடோறும் நீராடிப் பாவம் தொலையுமின்*
*கடமையைச் செய்யென்று அன்று சொன்னவன்*
*கண்ணனவன் சொற்படி நடந்து உய்யுமின் !*

# திரியாய் அம்மன்

இவ்வாலயம் முகாவில் கிராமத்தின் வடதிசையிலும் மருதங்கேணி உப்பாற்றின் தென்கரையோரமாகவும் அமைந்துள்ளது. இப்பகுதியில் பெருந்தொகையாக மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். பெரிய சந்தை ஒன்று இருந்திருக்கின்றது. சந்தைக்கு முஸ்லிம் வியாபாரிகள் முல்லைத்தீவில் இருந்து வந்து செல்வார்கள் என்றும் சந்தையில் ஐந்து சதம் கொடுத்தால் நிறைய அப்பம் தருவார்கள் என்றும் முகாவிலில் வாழ்ந்தவரான சண்முகம் என்பவர் கூறுவார். அவர் இன்றிருந்தால் நூற்று ஐந்தாவது பிறந்த தினத் தைக் கொண்டாடுவார். கொள்ளைநோய் ஒன்றின் காரணமாக பலர் இறந்துவிட்டனர் என்றும் ; கல்லுவம், இடைக்காடு, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர் என்றும்; இங்கிருந்த சந்தையே தற்போதுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டதென்றும்; இம்முதியவர் கூறுவார். பனைமர நிழலிலே பாட்டியாகக் காட்சி கொடுத்த பர்வதபத்தினி அம்பாள் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள் என்று உள்ளம் உருகி கண்ணீர் மல்கக் கூறுவார். பழைமையும் புதுமையும் நிறைந்த அம்பாளை நாமும் பக்தி சிரத்தையோடு பாடித் துதித்து அவளருளைப் பெறுவோமாக.

*திரியாய் பதி உறையும் பர்வத பத்தினியே !*
*தரியாது வந்தெனக்குன் தரிசனம் தந்திடுவாய்*
*போட்டி பொறாமையை நான் பூண்டோடொழித்திடுவேன்*
*காட்சியளித்திடுவாய் கருணை மழை பொழிவாய்*
*ஐம்புலனும் உன்புலனாய் நாளுந் துதித்திடுவேன்*
*உம்பருலகினிலே என்னை அணைத்திடுவாய் !*
*திரியாய் பதியுறையும் பர்வத பத்தினிக்கு*
*பொங்கலோ பொங்கலென்றால்*
*பொங்குதே உள்ளமெங்கும்*
*காவடி ஆட்ட மென்ன*
*கர்ப்பூர தீபமென்ன !*
*அரோஹரா கோசமென்ன*
*அன்னை அவள் வாசலிலே.*
*பக்தர்கள் பக்தி பொங்கும்*
*பானையில் பால் பொங்கும்*
*அன்னையின் அருள் பொங்க*
*அவனியில் இன்பம் பொங்கும்*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# பேராலை சித்தூன்றி விநாயகர்

இங்குள்ள விநாயகர் பேராலைக் கிராமத்தின் கிழக்குக் கரையோரமாக, மேற்கு நோக்கிய வண்ணம் அருள்பாலித்துக் கொண்டிருக்க, மேற்குக் கரையோரமாக பேராலை விநாயகர் எழுந்தருளி கிழக்கு நோக்கிய வண்ணம் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

சித்தூன்றி விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் ஒரு மரம் நின்றதாகவும், அந்த மரநிழலில் இருந்து ஒருவர் விநாயகரை வழிபட்டு வந்ததாகவும், அவருக்கு சித்துக் கிடைத்ததனால் சித்தூன்றி என்ற பெயர் வழங்கப்பட்டதாகவும், நாளடைவில் சிற்றூண்டி என்று மருவியதாகவும் இவ்வூரின்கண் வாழ்ந்தவரான அண்ணாவி முத்தையா கூறுவார்.

இவ்வூரில் தம்பு என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு தென்னந்தோட்டத்தில் கணக்கப்பிள்ளை வேலை செய்யச் சென்றார். செல்லும்பொழுது எம்பெருமான் வாயிலுக்குச் சென்றார். " எம்பெருமானே ! என்னை நல்ல நிலையில் ஆக்கிவிடு" என்று வேண்டுதல் செய்தார். எம்பெருமானும் அவரை நல்ல நிலையில் ஆக்கி வைத்தார். அவரும் அவரது பிள்ளைகளுமே ஓலைக் குடிசையாக இருந்த இவ்வாலயத்தைக் கல்லால் கட்டி கும்பாபிஷேகம் செய்தவர்களாவர். இவ்விடயம் இன்று வாழ்வோர் அனைவருக்கும் தெரியும். நாமும் அவன் மகிமையைப் பாடித் துதித்து அவன் திரு வருளைப் பெறுவோமாக.

*சிற்றூன்றிப் பதியுறையும் சிவனார் தலைக்குமரன்*
*பற்றூன்றிப் பணிவோர்க்கு பரமபதமளிப்பான்*
*உற்றாரும் பெற்றாரும் ஊராரும் வெறுத்தாலும்*
*வற்றாத அன்புடனே வாழ்வாங்கு வாழவைப்பான்*
*முற்றாத இளம்பிறையை ஒத்த நல்மருப்பொடித்து*
*பற்றோடு படிப்பதற்குப் பாரதத்தை எழுதி வைத்தான்*
*கற்றாவின் மனம்போலே கசிந்துருகி வேண்டி நின்றால்*
*கற்றோரின் சபைநடுவே கற்றோனாய் மிளிர வைப்பான்*

# பேராலை விநாயகர்

பேராலை என்ற ஊர்ப்பெயரைத் தாங்கி நிற்பது இவ்வாலயமாகும். பேராலை என்ற பெயர்வரக் காரணம் யாது என்று ஆராயவேண்டியுள்ளது. ஆலை என்றால் யானைகள் கூடம் என்றும் பொருள்படும். இவ்விடத்தில் பெரிய யானைக்கூடங்கள் இருந்திருக்கலாம்.

இவ்வாலயமும் மிகவும் அற்புதம் நிறைந்தது. ஓலைக்கொட்டிலாக இருந்த இவ்வாலயத்தை புண்ணியர் சீன்னையா பரம்பரையினரே கல்லால் கட்டிப் பூசைகளை சிறப்பாகச் செய்து நிர்வகித்து வருகின்றனர்.

நாமும் அவன் புகழைப்பாடி அவனருளைப் பெற்று உய்வடைவோமாக.

*எல்லா உயிரும் இறைமகவே என்பதனை*
*நல்லாய் உயர்ந்து நன்மையே செய்பவருக்கு*
*நல்லனவே நாளும் நிகழ்ந்திட அருள்புரிவான்*
*வல்லாம்பிகை பாகன் பேராலை விநாயகனே.*

## எழுது எழுது

எழுது எழுது
எனக்கொரு
கடிதம் எழுது
என்னை
காதலிக்கின்றேன்
என்றல்ல
ஏன் - ஏன்
தொடர்பை
துண்டித்தாய் என்று

**சுதன் - தமிழ்த்தேன்**
சங்கத்தார்வயல்

# பச்சிலைப்பள்ளி பொதுநூலக வரலாறும் அதன் பயன்பாடுகளும்

*இயற்கை எழில் கொஞ்சும் பசுமை நிறம் கொண்ட பச்சிலை மரங்களாம் தெங்கு, பனை, மா, பலாக்களும் செந்நெல்விளையும் கழனிகளும், தாமரைத் தடாகங் களும் , பல நீர்நிலைகளும், சைவ ஆலயங்களும், கிறீஸ்தவ ஆலயங்களும் மக்கள் பயன்பாட்டு ஸ்தலங்கள் அத்தனையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் இடம்தான் எமது பச்சிலைப்பள்ளிப் பிரதேசமாகும்.*

**திருமதி.அ.தர்மகுலசிங்கம்**
**இளைப்பாறிய நூலகர்**

*இப்பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் மையப்பகுதியாக விளங்குவது பளைநகரம் ஆகும். இங்கு பொதுச்சந்தை, பளை மத்திய கல்லூரி, தபால் நிலையம், புகையிரத நிலைய தரிப்பிடம், கடைத்தொகுதிகள், வங்கிகள், பொது வைத்தியசாலை, கமநல சேவை நிலையம், கிறீஸ்தவ தேவாலயம் எனப் பலவும் சூழவுள்ள பகுதியில் இப்பகுதி மக்களுக்கு அருட்கடாட்சத்தினை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் அருள்மிகு அம்பாள் ஆலயமான பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயமும் அமைந்துள்ளது. இவ்வாலயத்தினை நோக்கிய வண்ணம் அமையப் பெற்றிருப்பது தான் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை , புலோப்பளை பொதுநூலகம் ஆகும்.*

*இந்நூலகம் உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த கௌரவ R.பிரேமதாச அவர்களால் 5.12.1968ல் திறந்து வைக்கப் பட்டது. அக்காலப்பகுதியில் நூலகராகக் கடமையாற்றியவர் திருமதி. றோசறி பில மேந்திரா என்பவராவார். இவர் 1968ல் இருந்து 1976ம் ஆண்டுவரை நூலகப் பொறுப்பாளராகக் கடமையாற்றி பின்னர்*

லிகிதராகப் பதவியுயர்வு பெற்று மேற்படி பிரதேச சபையிலேயே கடமைபுரிந்து மாற்றலாகிச் சென்றுவிட்டார். அதனையடுத்து திருமதி. அ. தர்மகுலசிங்கம் என்பவர் 1976ல் இருந்து 2011ம் ஆண்டு வரை மேற்படி பிரதேச சபையில் நூலகராகக் கடமைபுரிந்து பதவியில் இருந்து ஓய்வுபெற்றார். அதன்பின்னர் தற்போது செல்வி.செ.உமாதேவி அவர்கள் நூலகராகக் கடமையாற்றி வருகின்றார். இந்நூலகம் உருவாவதற்குப் பெருமுயற்சி எடுத்து அதனை செயல்வடிவமாக்கியவர் அக்காலப் பகுதியில் பிரதேசசபைத் தலைவராக இருந்த திரு.ஏ.ஜீ.இராஜசூரியர் அவர்களாவர்.

1968இல் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகம் ஆயிரத்துக்குட்பட்ட நூல்களுடன் சேவை புரிந்தது. பின்னர் படிப்படியாக வருடாந்தம் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது. நூலகத்தில் இருக்கவேண்டிய எல்லாவித நூல் களையும் இந்நூலகம் கொண்டிருந்தது சிறப்புடையதாகும். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் பல இடப்பெயர்வுகளைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டது. இதில் 2000ம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் சுமார் 7828 நூல்கள் முற்றாக இழக்கப் பட்டது. பின்னர் 2006ம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின் 5000 நூல்கள் வரையில் பாவனையில் இருந்தது. தற்போது 2010ம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்டபின் நூலகம் பழையநிலைக்குத் தள்ளப்பட்ட சூழ்நிலையே காணக்கூடியதாக உள்ளது. 3000க்கு உட்பட்ட நூல்கள் வரையில் தான் தற்போது காணக்கூடியதாக உள்ளது.

இந்நூலகத்தினை ஆயிரக்கணக்கானோர் பயன்படுத்தினர். இப்பிரதேசத்திலே சகல துறையைச் சார்ந்தவர்களும் அரச உத்தியோகத்தர்களாக இன்று பணிபுரி கின்றனர். இதற்கு உறுதுணையாக விளங்கியது இந்த நூலகமே. இனியும் இதே போன்று வளர வேண்டும். அரச தனியார் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்நூலகத்திற்குத் தேவையான நூல்கள், கணனி வசதிகள் மற்றும் நவீன பயன்பாட்டுச் சேவைகளையும் வழங்குவதற்கு ஏற்ற நூலகமாக இந்நூலகம்

மிளிரவேண்டும். பாடசாலை மாணவர்கள் அனைவரும் நூலகத்திற்கு வந்து தாமாகவே தகவலைப் பெறும் ஒரு தகவல் மையமாக இந்நூலகம் விளங்க வேண்டும்.

பாடசாலை நூலகங்களை விட பொதுநூலகங்களே சிறந்த சேவையை அளிக்க முடியும். இந்த வகையில் எமது பச்சிலைப்பள்ளி பொது நூலகமும் சிறந்த சேவையாற்றி வருகின்றது. தற்போதைய காலகட்டத்தில் இந்நூலகம் வளர்ச்சிடைய பல தேவைகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நூலகத்தில் இடப்பற்றாக்குறையினால் ஒரே இடத்தில் சகல பிரிவுகளும் இயங்கி வந்தது. இன்றைய காலகட்டத்தில் இது சாத்தியமற்றதாக உள்ளது. உடன் உதவும் பகுதி , இரவல்கொடுக்கும் பகுதி, வாசிப்புப் பகுதி, சிறுவர் பகுதி, பத்திரிகைப் பகுதி போன்றவை தனித்தனியான பகுதியாக இயங்குவது வாசகர்களுக்கு மிக வசதியாக இருக்கும். நூலகம் அப்படி இயங்குவதுதான் பொதுவான நடைமுறை யாகும். அத்துடன் காலத்தின் தேவை கருதி இந்நூலகத்தினை நவீனமயப்படுத்தி வாசகர் நேரத்தினைப் பேண உரிய நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

சரியான தகவலைக் குறுகிய நேரத்தில் சரியாக வழங்குவதே ஒரு நூலகத்தின் கடமையாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு இப்பிரதேச சபையும் , பிரதேச மக்களும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

# போர் கொடியது

ஆண்டவன் தந்த
அழகிய வாழ்வை
கொடிய போர் வந்து
பாதியிலே பறித்துவிட்டது.
பள்ளி செல்லும் வேளையில்
பதுங்குகுழி தேடினோம்
துள்ளித் திரியும் நேரத்தில்
பதுங்கிப் பதுங்கி ஓடினோம்.
ஆசையில் வீடு கட்டி
ஆசைக்கு வாழ்ந்த நாளைவிட
பதுங்கு குழி தேடி
பதுங்கி வாழ்ந்த நாள் அதிகம்.
ஆசையாய் சேலைகட்டி
ஆனந்தமாய் போகும் நேரம்
சேலைக்குள் மண் போட்டு
பதுங்கு குழி அமைத்தோம்.
நிரந்தரமாய் வீடு கட்டி
நிம்மதியாய் இருக்கமுடியாமல்
நாளுக்கொரு இடத்தில்
தறப்பாளில் வீடுகட்டி வாழ்ந்தோம்.
சேற்றுத் தண்ணீர்
பார்த்து அறியாதோர்
வழித்து வழித்துஅள்ளி
பால் நிறத்தில் நாவரட்சி போக்கினோம்.
நாயை விடக் கேவலமாய்
தெருத் தெருவாய் நாம் அலைந்தோம்
சொந்த ஊரை விட்டு
சொந்த வீட்டை விட்டு.

பா.ரஜிதா
புலோப்பளை கிழக்கு.

# உடலைக் கோணிப் பைக்குள்

ஊர் ஊராய்
உயர உயரமாய்
பற்பல வர்ணங்களில்
பற்பல வடிவங்களில்
தரிசன கோபுரங்களல்ல
தரித்திரம் பிடித்த கோபுரங்கள்
உலகைக் கோணிப்பைக்குள்
கொண்டுவரும் என்பார்கள் – ஆனால்
தனிமனித செலவினத்தை சுதந்திரத்தை
குடும்ப உறவைப் பாதிக்கும்
இளைய தலைமுறையை
மீட்சியுறா பாதைக்கு இட்டுச்செல்லும்
தொலைத் தொடர்புக் கோபுரங்கள்
நன்மைகளை விரல்விட்டு எண்ணலாம்
தீமைகளை எண்ணிவிட முடியாது
அவ்வளவு
நன்மைகளை ஊருக்கியம்புவோர்
தீமைகளை இயம்புவதில்லை
தாக்கத்தில் தாக்கம்
எக்ஸ் கதிர்தாக்கம் அறிந்தும்
அறியாதவர் போல் இருக்கின்றோம் – இது
உலகைக் கோணிப்பைக்குள் அல்ல
உடலை கோணிப்பைக்குள்
கொண்டு செல்ல வைக்கும்
கோபுரம் என்பதனை.

அண்ணாசிலையடி சுமதி
வெ.சுப்பிரமணியம் (CDO)

# வரலாறு - புனைவுகளுக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் பச்சிலைப்பள்ளியின் அமைவு

**- கருணாகரன் -**

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைப் பற்றிய ஐதீகங்கள் மற்றும் வரலாற்றுக் கதைகள் ஏராளமுண்டு. ஆனால் அவற்றில் எவ்வளவு உண்மையானவை. எவை சரியானவை என்ற கேள்விகள் உள்ளன. என்றபோதும் வரலாற்றுத் தொடர்ச்சியுடைய : வாழ்க்கைத் தொடரையுடைய : ஒரு பிரதேசமாக பச்சிலைப்பள்ளி இருந்திருக்கின்றது என்பது வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், மக்கள் இலகுவாக வாழக்கூடிய சாத்தியங்களை அதிகமாகக் கொண்ட ஒரு புவியியல் பிரதேசமாக பச்சிலைப்பள்ளி இருந்துள்ளது, இன்னும் இருக்கிறது என்பது ஒன்று. கடலும் விவசாயத்துக்குரிய நிலங்களும், நீர் வளமும், காடும் அமைந்த வாழ்க்கை வளப் பிரதேசமாக இருப்பது இன்னொன்று.

அத்துடன் யாழ்ப்பாணத்துக்கும் அதற்கு வெளியே வன்னிக்கும் நாட்டின் பிற பகுதிகளுக்குமிடையிலான தொடர்பு வழியில் அது அமைந்திருப்பதால் , சனங்களின் ஊடாட்டமும், இருப்புத் தொடர்ச்சியும் பச்சிலைப்பள்ளியில் தொடர்ந்து நிலவியுள்ளது. ஆகவே இவற்றின் காரணமாக வரலாற்றுத் தொடர்ச்சியுடைய பிரதேசமாக அது இருந் துள்ளது, இருக்கவேண்டியதாக அமைந்திருக்கின்றது. இதுவே பச்சிலைப்பள்ளியின் வரலாற்றுச் சாத்தியங்கள்.

இலங்கையின் வரலாற்றில் கடலோரக் குடியிருப்புகளும், விவசாயக் குடியிருப்பு களும் முக்கியமானவை. இவையே இலங்கையின் வரலாற்றை உருவாக்கியவையும் கூட. மக்கள்

வாழ்வதற்கு வளங்கள் முக்கியமானவை. சனங்கள் வாழக்கூடிய வாய்ப்புக் களை வளங்களே உருவாக்குகின்றன. ஆரம்ப காலங்களில் , அந்த வளப் பிரதேசங் களாகக் கடலோரங்களும், விவசாயப் பிரதேசங்களும் அமைந்திருக்கின்றன. நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை என்று தமிழ் இலக்கியம் சொல்வதும் தமிழ்ப் பண் பாடு உரைப்பதும் இதைத்தான், இந்த அடிப்படையைத் தான். மக்கள் எத்தகைய நிலப் பகுதியில் வாழ்கின்றனர் என்பதைப் பொறுத்தே அவர்களுடைய தொழிலும் உணவும், கலையும், பண்பாடும் அமைகின்றன. அதாவது அவர்களுடைய வாழ்க்கை அந்த நிலப்பகுதியில் எப்படி அமைகின்றதோ அதைச் சார்ந்தே அவர்களுடைய பண்பாடும் உருப்பெறுகின்றது. திணைகளைப் பற்றிய சித்திரம் இது.

பச்சிலைப் பள்ளிப் பிரதேசம் கடலையும், விவசாய நிலங்களையும் சார்ந்தது. எனவே இந்த இரண்டு வளங்களையும் பிரதானமாகக் கொண்ட தொழிலையும், வாழ்வையும் அமைத்த பிரதேசமாகும். இதேவேளை இன்னொரு வளமும் தொழிலும் உண்டு. அது பனை சார்ந்தது.

யாழ்ப்பாணத்தின் பிற பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் ஏனையவற்றை விடப் பசுமை நிறைந்த பகுதியாக இந்தப் பகுதி இருப்பதால் "பச்சிலைப்பள்ளி" என்ற அடை யாளம் அதற்கு ஏற்பட்டிருப்பதாக ஒரு எண்ணமுண்டு. பச்சிலைப்பள்ளியை அண்மித் திருக்கும் தென்மராட்சியை இன்னும் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்தவர்கள் "குழைக் காடு" என அழைப்பதை இந்த இடத்தில் இணைத்துப் பார்க்க வேண்டும்.

ஆனால் பச்சிலைப்பள்ளி, பெரிய பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களைப் பற்றிய இன்னொரு ஐதீகம். இங்கே இயக்கக் குடியிருப்புகள் இருந்துள்ளன என்பதாகும். பச்சிலைப்பள்ளியின் வடக்கில் உள்ள நாகர்கோவிலில் நாகஇனக் குடியிருப்புகளும் இயக்கச்சியை அண்மித்த பகுதிகளில் இயக்கக் குடியிருப்புகளும் இருந்ததாக ஐதீகக்

கதைகள் சொல்கின்றன. ஆனால் இந்தக் கதைகளை மெய்ப்படுத்துவதற்கான அடை யாளச் சுவடுகள் எவையும் துலக்கமாக இல்லை.

இதேவேளை பச்சிலைப்பள்ளியின் மக்கள் வாழ்க்கைமுறை குறித்த அடை யாளங்களும் , சுவடுகளும் துலக்கம் பெறவில்லை. எனினும் இங்கே மக்களின் வாழ்க்கை தொடர்ச்சியாக இருந்திருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய சுருக்கப் பின்னணியை உடைய பச்சிலைப்பள்ளியின் வரலாற்றில் ஐதீகமும் யதார்த்தமும் உரசும்போது எழுகின்ற கேள்விகள் இந்தத் தொடரை எழுதும்படி தூண்டியுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கீழ்ப்பகுதியில் இருக்கின்ற பச்சிலைப்பள்ளியும் ஏனைய பிரதேசங்களைப் போல வரலாற்று நிகழ்ச்சிகளையொட்டி தன்னுடைய வரை படத்தை மாற்றியபடியே இருந்திருக்கின்றது. உலக வரலாற்றில் இத்தகைய வரைபட மாற்ற நிகழ்ச்சி காலந்தோறும் நடந்தே வந்திருக்கின்றது. இலங்கையிலும் இத்தகைய வரைபட மாற்ற நிகழ்ச்சியை நாம் காணமுடியும். முன்னர் இருந்த ராஜ்ஜியப் பகுதிகள் முதல் சாதாரண மக்கள் குடியிருப்புகள், அவர்கள் பயன்படுத்திய குளங்கள், அவர்கள் வழிபட்ட ஆலயங்கள், அவர்கள் பயன்படுத்திய இடுகாடுகள், அவர்கள் பயிர்செய்த நிலப்பரப்பு எனப் பலவும் இடம்மாறிய நிகழ்ச்சிகள் நடந்தேயுள்ளன.

அனுராதபுரம் இதற்கு நல்லதோர் உதாரணம். இன்று நாம் காணுகின்ற “பழைய நகரம்” , “புதிய நகரம்” என்ற அடையாளப்படுத்தல்கள் இதையே சொல் கின்றன. பொலநறுவை இராஜ்ஜியம் வேறு மையத்துக்கு நகர்ந்தது இன்னொரு உதாரணம். இன்றுள்ள யாழ்ப்பாண மாவட்டம் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அநுராதபுரம் வரையில்

நீண்டு பரந்திருந்தது. " சென்னை மாகாணம்" என்பது தென் இந்தியா முழுவதையும் உள்ளடக்கியிருந்ததைப் போல மேலும் இன்று நாம் பார்க்கின்ற, புழங்குகின்ற யாழ்ப்பாண நகரம் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எப்படியிருந்தது? எங்கே இருந்தது ? என்று தெரிந்தவர்களுக்கு இந்த வரைபட மாற்றங் களைப் பற்றி இலகுவிற் புரியும்.

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட கிளிநொச்சியின் வரைபட மாற்றம் எப்படியாக இருந்தது, இன்னொரு உதாரணம். முன்னர் " பழைய பஸ் நிலையம்" என்று சொல்லப்பட்ட இடத்தில் இன்று சனங்கள் பஸ் ஏறி, இறங்கு வதற்கு ஒரு சிறு பேருந்துத் தரிப்பிடம் இல்லை. இப்பொழுது உள்ள பஸ் நிலையம் கிளிநொச்சியில் ஏறக்குறைய ஐந்து இடங்களுக்கு மாற்றங்களைச் சந்தித்தது. ஒரு ஐம்பது ஆண்டுகளுக்குள் இவ்வளவு இடமாற்றம் - வரைபட மாற்றம் என்றால் நீண்ட தொடர்ச்சியுடைய வரலாற்றில் எத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் ?

இப்படித்தான் எங்கும் வரைபடங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. அதைப் போல பிரதேசங்களின் அடையாளத்திலும் அதை அடையாளப்படுத்துவதிலும் அதன் அளவிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன.

25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் வடக்கே (இன்றைய வடமராட்சி கிழக்கு ) ஆழிக்கடலை எல்லையாகக் கொண்டது. இன்று அதனுடைய வட பிரதேசம் இன்னொரு வரைபடப் பிரதேசமாக, வடமராட்சி கிழக்கு என மாறியுள்ளது.

அதற்கு முன்னர் வன்னிப் பிராந்தியத்தின் பெரும்பகுதியைத் தன்னுடைய நிர்வாகப் பரப்பிற்குள் கொண்டிருந்த ஒரு மையமாக - ஒரு வரைபடப் பிரதேசமாக

பச்சிலைப்பள்ளி இருந்திருக்கின்றது. அப்போது வன்னியில் பாண்டியன்குளம் வரையில் பச்சிலைப்பள்ளியின் நிர்வாக ரேகைகளின் இரத்த ஓட்டம் நிகழ்ந்திருக்கின்றது.

ஆனால் வன்னி ராஜ்ஜிய காலப் பகுதியில் பச்சிலைப் பள்ளியின் நிலை, அதனுடைய நிர்வாகம் எல்லாம் எப்படி இருந்தன என்று அறிய முடியவில்லை. எனினும் ஐரோப்பியரின் வருகையோடு பச்சிலைப் பள்ளிப் பிரதேசம் ஒரு முக்கிய பாதுகாப்பு மையப் பகுதியாக இருந்திருக்கின்றது. ஏறக்குறைய இன்று பேசப்படும் " உயர் பாது காப்பு வலயம்" என்று உணர்கின்ற அளவுக்கு இந்தப் பிரதேசம் இருந்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் நாட்டின் பிறபகுதிகளுக்கும் இடையில் உள்ள ஒரே நிலத்தொடர்புப் பிரதேசம் என்பதால், இந்தப் பகுதி இத்தகைய முக்கியத் துவத்தைப் பெற்றிருக்கின்றது. எனவே தான் இந்தப் பிரதேசத்தின் மூன்று மையங்கள் பாதுகாப்பு மையங்களாக இயங்கியிருக்கின்றன. ஒன்று இயக்கச்சியில் உள்ள கோவில் வயல் என்ற இடத்தில் இருக்கும் வாடியடி. இங்கே pyl என்ற பெயரில் ஒரு சிறு கோட்டை கட்டப்பட்டிருந்தது. அதாவது பாதுகாப்பு ஒழுங்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கோட்டை. அடுத்தது பெரிய பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள வெற்றிலைக் கேணியில் அமைக்கப்பட்டிருந்த Basutta என்ற கோட்டை. இதுவும் இயக்கச்சியில் இருந்ததைப் போல சிறிய பாதுகாப்புக் கோட்டை. ஆனால் இது கடற்கரைப் பிரதேசம் என்பதால் , இங்கே ஒரு வெளிச்ச வீடும் ( கோரி ) அமைக்கப்பட்டிருந்தது. அடுத்தது ஆனையிறவு வாடிவீட்டில் இருந்த Basculla என்ற கோட்டை. இது ஒப்பீட்டளவில் மற்ற இரண்டையும் விடப் பெரியது. கூடிய வசதிகளைக் கொண்டது. அதிகாரி நிலையில் உள்ள பாதுகாப்புத்தரப்பினரின் இருப்பிடத்தையும் உள்ளடக்கியிருந்திருக்கிறது.

ஆகவே இங்கே சற்றுச் செறிவான ஐரோப்பியர்களின் நடமாட்டம் இருந்திருக் கின்றது. ஆனால் அது அவர்களுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்டதாக இருந்திருக் கின்றது என்றே எண்ண முடிகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிறபகுதிகளைப் போல இங்கே பச்சிலைப்பள்ளியில் ஐரோப்பியர்களின் பெரிய பாடசாலைகள், வீடுகள், கட்டடங்கள், தேவாலயங்கள், மருத்துவ நிலையங்கள் போன்ற எவையும் இருந்த தாகத் தெரியவில்லை. ஆனால் பளை நகரப் பகுதியில் அமைந்திருக்கும் புரொட்டஸ் தாந்து மதப்பிரிவைச் சேர்ந்த தேவாலயம் 1833இல் கட்டப்பட்டிருப்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி. பளை, முகமாலை, கிளாலி மற்றும் செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தேவாலயங்களும் அங்கேயுள்ள கிறிஸ்தவ மக்களும் ஐரோப்பியச் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தமையைச் சொல் கின்றன. என்றாலும் இங்கே வலுமிக்க செல்வாக்கும் அதன் வளர்ச்சி நிலையும் பெரி தாக இருந்ததற்கான சான்றுகள் கிட்டவில்லை.

இதேவேளை பச்சிலைப்பள்ளியில் சைவ ஆலயங்கள் கூட யாழ்ப்பாணக் குடா நாட்டில் இருந்த அளவுக்குப் பெரியனவாகவோ , புகழ்பெற்றனவாகவோ இருந்ததாக இல்லை. மண்டலாய்ப் பிள்ளையார், சின்ன மண்டலாய்ப் பிள்ளையார், அரசர் கேணியில் அமைந்திருக்கும் நெளியாய் அம்மன், பளையில்இருக்கும் அறத்தி அம்மன், கிளாலியில் உள்ள மூன்று தேவியர் கோவில் போன்றன ஒரு மங்கிய அடையாளம். ஆனால் இந்தக் கோவில்கள் கூட பலவும் இன்றைய இடங்களிலும் இன்றைய தோற்றத் தோடும் அன்றிருக்கவில்லை. குறிப்பாக மல்வில் கிருஷ்ணன் கோவிலைப் பற்றி வரலாற்றாய்வாளர் கலாநிதி பொ.ரகுபதி குறிப்பிடும்பொழுது அது “வல்லியக்ககன்” என்ற தெய்வத்தை வழிபடும் கோவிலாக இருந்ததாகக் கூறுகின்றார்.

( தொடரும் )

# நாட்டுக்கூத்தும் பச்சிலைப்பள்ளியின் மதவழிபாடும்

வி.எஸ்.புவனராசா
(புவனா)
கிராம அலுவலர்

எமது பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நாட்டுக்கூத்தும் நம்மவர் வழிபாடும் தொடர்பாக நாம் கண்டு, செவிவழி கேட்டு அறிந்தவரை பன்னெடுங்காலமாக ஓர் மரபுவழியாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையைக் காண்கின்றோம். இசை நாடகப் பாணியில் அமைந்த இறை அம்சம் முன்னிறுத்தப்படும் அன்றேல் மக்களை நல்வழிப் படுத்தும் சிந்தனை ஊட்டி சிந்திக்க வைக்கும் பாணியில் அமைந்த புராணக் கதை களோடு பின்னிப் பிணைந்தவகைக் கதைகள் வடிவமைக்கப்பட்டு இக்கதைகளுக்கு இடையே இசை அம்சம் பொருந்திய பாடல்கள் ஊடாக கருத்துக்களை முன்வைக்கும் பாணியைக் காணலாம்.

இக்கதைகள் பெண்தெய்வ வழிபாட்டை முதன்மைப் படுத்துவதையும் அத் துடன் ஆண் தெய்வ வழிபாட்டை வெளிப்படுத்துவதையும் காணலாம். உதாரணமாக “காத்தவராயன் சிந்துநடைக் கூத்து”, “கோவலன் கண்ணகி நாடகம்” போன்றவற்றைக் காண்கின்றோம். இக்கோவலன் கண்ணகி வரலாறானது கண்ணகி அம்மன் கோவில் களில் உற்சவ காலங்களில் ஒன்பது நாட்கள் ஏடுபடிக்கும் முறை மூலம் படிக்கப்படு வதையும் காணலாம். மற்றும் பண்டைய அரசாட்சி முறையை நிலைநிறுத்தும் “இரா மாயணம்” , “ மகாபாரதம்” போன்ற நாடகங்கள் ஊடாக மக்கள் சமூகத்திற்கு இப்படி நடந்தால் இப்படித்தான் விளைவு வரும் என்பதை முன்னிறுத்தி நாட்டுக்கூத்துப் பாணியில் இசைநாடகமாக நல்வழிப்படுத்தும் கருத்துக்களை ஆரம்ப காலத்தில் மூன்று நாட்களிற்கு மேல் மேடை ஏற்றப்பட்டு வந்த மரபு தற்போது ஒரு நாள் கூத்தாகக் குறைக்கப்பட்டு மேடை ஏற்றப்படுவதைக் காண்கின்றோம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

எமது பச்சிலைப்பள்ளியில் எம் மூதாதையர் காலத்தில் இருந்து பெண் தெய்வ வழிபாடே முதன்மை பெற்றுள்ளது. இதை நாம் இப்போதும் கண்கூடு காண்கின்றோம்.

பச்சிலைப்பள்ளியின் வட கரையோரமாக முகமாலை அம்பளவனை அம்மன் கோவிலும், தம்பகாமம் செருக்கன்சாட்டி அம்மன் கோவிலும் , தம்பகாமம் நெளியாய் அம்மன் கோவிலும், சோறன்பற்று நெல்லிப்பள்ளம் அம்மன்கோவிலும், மாசார் வாணன் அம்மன் கோவிலும், முகாவில் திரியாய் அம்மன் கோவிலும், முகாவில் சல்லி அம்மன் கோவிலும் அமைந்துள்ளன. மதுரையிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்ட கண்ணகி இக்கரையோரமாக வற்றாப்பளையை அடைந்ததாகப் பழைய வரலாறு எம் முன்னோர் கூறுகின்றனர். திரியாய்ப் பகுதியில் பனந்தோப்பில் பனங்கொட்டை எடுத்துக்கொண்டு ஓர் வயோதிப மாது நின்றதாகவும், அவரைப் பார்க்கச் சென்ற சமயம் அருகில் சென்றபோது அவ்வயோதிபமாது மறைந்துவிட்டதாகவும் அவ்விடத்திலேயே திரியாய் அம்மன்கோவில் அமைக்கப்பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் மூலம் அறியமுடிகின்றது. தென்கரையோரத்தில் வேம்பொடுகேணி நவனி வெளி அம்மன் கோவில் , அறத்தி அம்மன் கோவில், தர்மக்கேணி அம்மன் கோவில் மத்திய பகுதியில் இரட்டைக்கேணி அம்மன் கோவில் என்பனவும் இப்பிரதேசத்தில் பன்நெடுங்காலமாக மக்களால் வழிபடப்பட்டமையைக் காணலாம். அது மட்டுமல்லாது முத்துமாரி அம்மன் வழிபாட்டையும், கோவில்களையும் காண்கின்றோம்.

பெண் தெய்வ வழிபாடு அல்லாமல் எம் பிரதேசங்களில் ஆண் தெய்வ வழி பாட்டையும், கோவில்களையும் காணலாம். வடகரையோரமாக இத்தாவில் முருகன் கோவில், கோவில்காட்டு பிள்ளையார் கோவில், தம்பகாமம் உப்புக்கேணிப் பிள்ளை யார் கோவில், நெளியாய்ப் பிள்ளையார் கோவில், சீராவிப் பிள்ளையார் கோவில், மாசார் பிள்ளையார்

கோவில், முகாவில் பிள்ளையார் கோவில், கோவில்வயல் மண்டலாய்ப் பிள்ளையார் கோவிலும் தென்கரையோரமாக கச்சார் வெளிப்பிள்ளையார் கோவில், முருகன் கோவில், வேம்பொடுகேணி வீரபத்திரர் கோவில், சாலை வைரவர் கோவில், புலோப்பளை முருகன் கோவில், பளை நரசிம்ம வைரவர் கோவில், சின்னத்தாளையடி பூதவராயர் கோவில், தர்மக்கேணி தான்தோன்றிப் பிள்ளையார் கோவில், பேராலை சிற்றுண்டிப் பிள்ளையார் கோவில், மல்வில் கிருஷ்ணன் கோவில் என்பனவும் இன்னும் பல சிறு கோவில்களும் ஆங்காங்கே காணப்பட்டாலும் மேல் காணப்படும் ஆலயங்கள் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன.

இங்குள்ள அம்மன் கோவில்களில் பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக எம்மக்களால் "காத்தவராயன் சிந்துநடைக்கூத்து", "கோவலன் கண்ணகி இசை நாடகம் " என்பன அரங்கேற்றப்படுவதைக் காணலாம்.

எம்மால் அறியக்கூடிய வகையில் சின்னத்தாளையடியில் பிறந்து வண்ணாங் கேணியில் வாழ்ந்த கனகசபை கந்தையா என்னும் இயற்பெயர் கொண்ட அண்ணாவி இராசா என்பவர் எமது பகுதியில் நாட்டுக்கூத்தில் முன்னிலை பெற்றுள்ளார். இவர் பல்வகை நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளதை நாம் அறிகின்றோம். உதாரணமாக "வள்ளி திருமணம்" , "கோவலன் கண்ணகி" போன்ற நாடகபாணிக் கூத்துக்களை இவர் சிறப்புற அரங்கேற்றியுள்ளதைக் காணலாம். இதன் காரணமாக இவருக்குப் பின்னாளில் " மணி மாஸ்ரர்" என்னும் பெயர் வரவும் காரணமாயிற்று. இவர் தனது கலைத்திறனைப் புலோலியூர் அண்ணாவியார் வைரமுத்துவிடம் கற்று பச்சிலைப்பள்ளியில் நாட்டுக்கூத்து என்னும் கலையை நிலைநிறுத்தியுள்ளார். புலோப் பளையில் அண்ணாவியார் பெரியதம்பி என்பவர் இருந்து நாட்டுக்கூத்தை வளர்த்த தையும் செவிவழியாக அறிகின்றோம்.

பேராலையில் இக்கலையை வளர்த்தவர்களாக அண்ணாவி விஸ்வநாதர் முத்தையாவும் நாட்டுக்கூத்தை நம்மண்ணில் நிலைபெறச் செய்துள்ளார். இவரின் " அல்லி அருச்சுனா" என்ற புராண நாடகம் நாட்டுக்கூத்துப் பாணியில் அரங்கேற்றப் பட்டதை அப்பகுதி மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.

முகாவில் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் அண்ணாவியார் தில்லையம் பலம் என்பவர் நாட்டுக்கூத்தை நன்நிலைப்படுத்திச் சென்றுள்ளார். தற்போது இவரின் சந்ததியினர் தி.சண்முகநாதன் , தி.சிவகுருநாதன் மற்றும் காசிநாதர் சிவராசா என் போர் கைக்கொண்டு செயற்படுத்தி நாட்டுக்கூத்தை நிலைபெறச் செய்வதைக் காணலாம். இங்கு காத்தவராயன் சிந்துநடைக்கூத்து காலம் காலமாக அரங்கேறு கின்றது.

மற்றும் சோறன்பற்று சின்னவி கணபதிப்பிள்ளை என்பவர் தனது குரு சோறன் பற்றில் பிறந்தவரும் தச்சடம்பன்வாசியுமான கந்தையா என்பவரிடம் நாட்டுக்கூத்தைக் கற்று பச்சிலைப்பள்ளியின் பல்வேறு பகுதியில் மட்டுமல்லாது அம்பகாமம் , கச்சாய் போன்ற பகுதிகளிலும் காத்தவராயன் சிந்துநடைக்கூத்தை மேடையேற்றி எமது பிர தேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். இதனால் காத்தவராயனுக்கு கணபதிப்பிள்ளை அண்ணாவி என்று சொல்லுமளவிற்கு முன்னிலை பெற்றுள்ளார். தற்போது இவரின் வழியில் க.கணேசு என்பவர் இங்கு இக்கூத்தை அரங்கேற்றி வைக்கின்றார்.

சின்னத்தாளையடியில் செல்லத்துரை அண்ணாவியார் பல நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். அவரிடம் கூத்துக் கலையைக் கற்ற செல்லையா சுந்தரம் என் பவர் இங்கு இக்கலையை வளர்த்து வருவதுடன் மிருதங்கத்தையும் பழக்கி வருவதைக் காணலாம். "சத்தியவான் சாவித்திரி",

"அரிச்சந்திரா" , "வள்ளி திருமணம்", " பவளக் கொடி", " காத்தவராயன்" போன்ற கூத்துவகைகள் இவரால் பழக்கி அரங்கேறுகின்ற தைக் காணலாம்.

வண்ணாங்கேணியில் முதலி சின்னத்தம்பி என்பவர் பல நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார். இவரின் வழியில் இவரின் மகன் சின்னத்தம்பி செல்லையா இக்கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றி வந்தார். இவரால் பல நாடகங்கள் உதாரணமாக "அரிச்சந்திரா மயான காண்டம்" , " சத்தியவான் சாவித்திரி" , " ஞான சவுந்தரி" , "சிறிவள்ளி" , " நல்லதங்காள்", " வள்ளி திருமணம்" போன்ற நாடகங்கள் பழக்கப்பட்டு அரங்கேறியதைக் காணலாம். அது மட்டுமல்லாது ஆர்மோனியம் வாசிப் பதிலும் இவர் முதன்மை இடத்தை வகித்துள்ளார். அது மட்டுமல்லாது பல நாட்டுக் கூத்துக்கு ஒப்பனை செய்வது , கொட்டகை அமைத்தலுக்கு சீன் வகை கட்டுவது போன்ற பல்வகைக் கலைச்செயற்பாடுகளை இவர் ஆற்றியமையைக் காணலாம். இவரின் சீன்கட்டும் ஆற்றலால் பின்னாளில் சீன் செல்லையா என்ற பெயர் வழங்கல் ஆயிற்று. தற்பொழுது இவரின் பிள்ளைகள் சந்திரன், இரத்தினகுமார் என்போர் இக் கலையை மேற்கொள்வதைக் காணலாம்.

தம்பகாமத்தில் மருதங்கேணி அண்ணாவியார் அப்புக்குட்டி என்பவரால் அரங்கேற்றப்பட்ட இராமாயணம் நாடகத்தில் பாத்திரத்தெளிவும், நாடகம் பழக்கும் திறனும், பங்கேற்றவர் நடிப்புத்திறனும், ஒப்பனைத் திறமையும் காரணமாக தம்பர் கந்தையா என்னும் பெயரை உடையவர் நடிப்புத்திறனால் தலைப்பெயர் மாறி அனுமார் கந்தையா என்னும் பெயரைப் பின்னாளில் பெறவேண்டி ஆயிற்று. இங்கு கந்தையா கனகரத்தினம் என்பவரும் தற்போது கந்தையா ஆறுமுகம் அண்ணாவியாரும் இக் கலையைப் பின்பற்றுவதைக் காணலாம். ஆசீர்வாதமுத்து மரியநாயகம் நாட்டுக் கூத்துக் கலையுடன் ஆர்மோனியம் இசைப்பதிலும் பிரபலம் பெற்றுள்ளார்.

புலோப்பளையில் நாட்டுக்கூத்துக் கலையை வல்லிபுரம் செல்லத்துரை பல் வகைக் கலை வடிவங்களாக முன்னெடுப்பதைக் காணலாம். இவரால் பல நாடகங்கள் பழக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டதையும் காணலாம். அத்துடன் இவரின் கரகாட்டக் கலை இங்கு முதன்மை பெற்றுள்ளது. மற்றும் கிறிஸ்தவ கூத்துவகையை அல்பிரட், நீக்கிலாஸ், அலேஸ், பிராஞ்சிஸ் என்பவர்கள் இப்பிரதேசத்தில் முன்னெடுத்துச் செல் கின்றனர்.

மாசாரில் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவர் பல்வகை நாட்டுக்கூத்துக் கலைநிகழ்வுகளைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும், பெரியோருக்கும் பழக்கி அரங் கேற்றியதில் இருந்து இவரின் கலைஆர்வம் இப்பகுதியில் மிளிர்வதைக் காணலாம்.

எமது பச்சிலைப்பள்ளியில் நாட்டுக்கூத்தும், மதவழிபாடும் ஒருங்கிணைந்து எம்முற்பட்ட சந்ததியினராலும், எம் சந்ததியினராலும் முன்னெடுத்துச் செல்லப்படு வதைக் காணலாம். இதன் காரணமாக அன்று தொட்டு இன்று வரை கலை , கலாச் சாரம் , மதம், வழிபாட்டு முறைகள் நிலைத்து நிலை பெறுவதற்கும் , அழியாது அற நெறி தளைத்து ஆக்கம் பெறுவதற்கும், சமுதாயம் சீரும் சிறப்புடனும் சிறந்து விளங்குவதற்கும் வழிகாட்டி, வழி சமைத்துச் சென்ற வழிபாட்டுடன் கூடிய நாட்டுக் கூத்துக் கலையும் ஒன்றென்பதும் எம்சந்ததியினரின் எதிர்காலம் கருதிய என்றும் நிலை பெறும் அழியா செயற்பாடாகும் என்பதில் ஐயமில்லை.

# பிரபல நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| இராமாயணம் ( மூலம் ) | - | வான்மீகி |
| இராமாயணம் ( தமிழில் ) | - | கம்பர் |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| பெரியபுராணம் | - | சேக்கிழார் |
| மகாபாரதம் ( மூலம் ) | - | வியாசர் |
| மகாபாரதம் ( தமிழில் ) | - | வில்லி புத்தூரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| தேம்பாவணி , ஒப்பியல் இலக்கணம் | - | வீரமா முனிவர் |
| மகாவம்சம் | - | மகாநாம |
| பாஞ்சாலிசபதம் | - | சுப்பிரமணிய பாரதியார் |
| காஞ்சிப்புராணம் | - | சிவஞானமுனிவர் |
| நற்சிந்தனை | - | யோகர்சுவாமி |
| நன்னூல் | - | பவணந்தமுனிவர் |
| வெற்றிவேற்கை | - | அதிவீரராம பாண்டியன் |
| நல்வழி, ஆத்திசூடி , கொன்றைவேந்தன் , நீதி நூல்கள் | - | ஔவையார் |
| மனோன்மணீயம் | - | சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | - | ரவீந்திரநாத் தாகூர் |
| மணிமேகலை | - | சீத்தலைச் சாத்தனார் |
| தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| சூளாமணி | - | தோலாமொழித்தேவர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| போரும் சமாதானமும் | - | லியோ ரோல்ஸ்ரோய் |
| இலியட், 3 டிசி | - | ஹோமர் |
| நளவெண்பா | - | புகழேந்தி |


| | | |
|---|---|---|
| நள்ளிரவுச் சுதந்திரம் | - | லாரிகாவின், டொமினிக் , லேப்பியர் |
| அர்த்தசாஸ்திரம் | - | கௌடில்யர் |
| ஆசியஜோதி | - | எட்வின் ஆர்நொல்ட் |
| சத்தியசோதனை | - | மகாத்மாகாந்தி |
| குடியாட்சி | - | பிளாற்றோ |
| ஒரு உலகம் | - | வேண்ட்ஸ்வில்கி |
| மூலதனம் | - | கார்ல்மாக்ஸ் |
| சகுந்தலைவெண்பா | - | சு.நடேசபிள்ளை |
| இனியவை நாற்பது | - | பூதஞ்சேந்தனார் |
| கீத கோவிந்தம் | - | ஜெயதேவர் |
| அக்னிக்குஞ்சுகள் | - | அப்துல்கலாம் |

**கே.திவாரகா**
தரம் - 09 (கிளி / பளை மத்திய கல்லூரி)

# பேராசை பெருநட்டம்

ஓர் ஊரில் புத்திசாலியான திருடன் ஒருவன் இருந்தான். அவன் புத்திசாலித்தனமாகத் திருடி தன் வாழ்நாளைக் கடத்தினான். எந்தப் பாதுகாப்பு வழங்கினாலும் அவன் எப்படியாவது புத்திசாலித்தனமாகத் திருடிவிடுவான். ஒருமுறை திருடன் பண மூட்டையுடன் காட்டுவழியாகச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பழைய கிணற்றுக்கு அருகில் ஒரு சிறுவன் அழுதுகொண்டே இருந்தான். அத்திருடன் அந்தச் சிறுவனிடம் ஏன் அழுகின்றாய் ? என்று கேட்டான். அச்சிறுவன் எனது மாமா ஒரு பவளச்செம்பு கொடுத்திருந்தார். அதனை நான் இந்தக் கிணற்றுக்கு அருகில் வைத்து விட்டு எழுந்தேன். அப்போது காற்றுஅடித்ததால் அச்செம்பு கிணற்றுக்குள் விழுந்துவிட்டது என்று கூறினான். அதைக்கேட்ட திருடனுக்கு பவளச் செம்பு என்றவுடன் ஆசை வந்துவிட்டது. அத்திருடன் மனதுக்குள் நான் இச்செம்பை எடுத்துவிட்டு இப்பையனை ஏமாற்றிவிடலாம் எனத் திட்டம் தீட்டி விட்டுக் கூறினான் நில்லு, நில்லு. நான் உனக்கு அச்செம்பை எடுத்துத் தரலாம் என்று கூறிவிட்டு பணமூட்டையைக் கிணற்றுக்கு அருகில் வைத்துவிட்டு கிணற்றுக்குள் இறங்கினான். கிணற்றுக்குள் பார்த்தபோது பவளச் செம்பைக் காணவில்லை. எனவே மனவருத்தத் துடன் மேலே ஏறினான். அப்போது பணமூட்டையையும் காணவில்லை. அச்சிறுவனை யும் காணவில்லை. அவன் நினைத்தான். இச்சிறுவன் தன்னை விடவும் மிகவும் புத்தி சாலித்தனமாக இருக்கிறானே என மனதுக்குள் எண்ணிக்கொண்டு மிகவும் மன வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

**விந்துஜன்**
கிளி/பளை றோ.க.த.க.
பாடசாலை




அம்பாள்
புத்தகசாலை
சிறுவர் முதல் பெரியோர் வரை
பயன்படுத்தக் கூடிய அனைத்து
புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள்,
பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப்பொருட்கள் என்பவற்றை
மலிவாகவும் தரமாகவும்
ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள
Ampal Book Shop
Kandy Road,
Palai.
கண்டி வீதி,
பளை.
T.P: 021 492 5481.


SIVASAKTHY
HARDWEAR
சீமெந்து வகைகள்,
இரும்புக்கம்பி வகைகள்,
பைப் வகைகள்,
பெயின்ற் வகைகள்,
கட்டிடப்பொருட்கள் மற்றும்
தரமான கூரைத்தகடுகள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
சிவசக்தி
ஹாட்வெயர்
Kandy Road,
Palai.
கண்டி வீதி,
பளை.



போட்டோ சிறி
அடையாள அட்டை, பாஸ்போட் மற்றும்
உட்புற வெளிப்புற படப்பிடிப்பாளர்கள்.
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
சகல வைபவங்களைவும்
அதிநவீன டிஜிரல் கமராமூலம்
மிகத்துல்லியமாகவும்
நேர்த்தியாகவும் அனுபவமிக்க
படப்பிடிப்பாளர்களால் படம் பிடித்திட
உங்கள் நம்பிக்கையான தெரிவு
PHOTO SRI
உரிமையாளர்: சிறி.
கண்டி வீதி, பளை.
Kandy Road, Palai.



Nila Eletrical Center
& Velan Store
அனைத்து வகையான
மின்சாரப்பொருட்கள்,
மற்றும் விவசாய உள்ளீடுகள்,
உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
அனைத்தையும் மலிவாகவும்
உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
நிலா
மின்னியல் நிலையம்
வேளாண் நிலையம்
Station Road,
Palai.
புகையிரதநிலைய வீதி,
பளை.
T.P: 021


Anta Construction &
Mohan Book Shop
போட்டோ கொப்பி, அன்பளிப்புப்பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
கூல் சோடா, யூஸ், என்பவற்றை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளவும்
கட்டட ஒப்பந்த வேலைகளை சிறந்த முறையில்
துரிதமாகவும் செய்து கொள்ளவும் நாடுங்கள்
அன்ரா
கொன்ஸ்ரக்சன் அன்
மோகன் புத்தகசாலை
Kandy Road, Pallai.
கண்டி வீதி, பளை.


Kulanthai Unavakam
அனைத்து வகையான காலை, பகல்,
மாலை நேர உணவுவகைகளையும்
தேனீர், வடை, றோல்ஸ், கேக், இடியப்பம்,
பிட்டு, தோசை, ஐஸ்கிறீம் வகைகள்
தரமாகவும் சுவையாகவும்
மலிவாகவும் ஒரே இடத்தில் பெற்றிட
உங்கள் நம்பிக்கையான தெரிவு
தரம், சுவை, மலிவு என்றால் அது
குழந்தை உணவகம்
உரிமையாளர்: தீபன்.
கண்டி வீதி,
பளை.
Kandy Road,
Palai.


MUTHTHUMARI
BULDING MATERIALS & SPARE PARTS
தரமான கூரைத்தகடுகள்,
சீமெந்து வகைகள்,
பெயின்ற் வகைகள்,
இரும்புக்கம்பி வகைகள்,
பைப் வகைகள்,
கட்டிடப்பொருட்கள் மற்றும்
இலத்திரனியல் பொருட்கள்
அனைத்தையும் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள
முத்துமாரி
கட்டடப்பொருள் மற்றும்
உதிரிப்பாகம்
Station Road,
Palai.
புகையிரத நிலைய வீதி,
பளை.


Nagamman Multi Shop
அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
மற்றும் கூல் சோடா, யூஸ்,
ஐஸ்கிறீம், பிஸ்கட் வகைகள்
மற்றும் அன்றாட
விட்டுப் பாவனைப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள
நாகம்மன்
பல்பொருள் வாணிபம்
Kandy Road,
Palai.
கண்டி வீதி,
பளை.
T.P: 021 320 0117


பளை பனை தென்னை
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
உங்கள் நம்பிக்கையான நிறுவனம்
PALMYRA COCONUT DEVALOPMET
CO-OP SOCITY PALAI.
பதிவு இல. : PA52-18/03/1972
கண்டி வீதி.
பளை.
Kandy Road,
Palai.




Ramyan Printers, Madduvil. 0773471022